# மோதுகை மாற்றுநிலையாக்கத்தில் அபிவிருத்தி உதவிகளின் வகிபாகம்: வலுவூட்டல் முறைவழிகளிற்கும் சமுதாய கட்டியெழுப்புகைக்குமான அனுசரணை வழங்கல்

கிறிஸ்டீன் பிக்டன் மற்றும் பெனடிக்ற் கோர்ப்




1. அறிமுகம் 422

2. தடம் 111 அபிவிருத்தி உபாயங்களும் அதன் வகிபாகமும் 423

3. உள்ளூர் வலுவாக்கலின் தர்க்கமும், அபிவிருத்தி முகவர் நிலையங்களினது தர்க்கமும். 428
   முகாமையின் தர்க்கப்பாடு 428
   (உள்ளூர்) வலுவாக்கலின் தர்க்கப்பாடு 429
   அபிவிருத்தி முகவர் நிலையங்களின் தர்க்கப்பாடு 433

4. பல்வேறு கருத்தாடல்களின் பின்புலத்தில் வலுவாக்கல். 434

5. சமுதாய அபிவிருத்தி சூழமைவிற்குள் பங்குகொள்ளல் வலுவாக்கல் அணுகுமுறைகள். 437

6. செயற்பாடுகளிற்கான கிடைவழிகள் 445

7. முடிபுரை: சிக்கற்பாடுகள் நிறைந்த அவசர வேளைகளில் அபிவிருத்தி முகவர் நிலையங்கள் அரசியல் ஆற்றுகையாளர்களாக இடம்பெறல் 452

8. உசாவலும், மேலதிக வாசிப்பும். 454

# மோதுகை மாற்றுநிலையாக்கத்தில் அபிவிருத்தி உதவியின் வகிபாகம் : அதிகார வலுவூட்டல் முறைவழியினையும் சமுதாய கட்டியெழுப்புதலையும் வசதிப்படுத்துதல்.

**கிறிஸ்டீன் பிக்டன் மற்றும் பெனடிக்ட் கோர்ப்**

## 1. அறிமுகம்:

இந்த அத்தியாயமானது அபிவிருத்தி உதவித் துறையினுள் வலுவூட்டல் அணுகுமுறைகளின் கோட்பாட்டு ரீதியிலான ஊகங்கள் மற்றும் எதிர்பார்ப்புக்கள், அவைபோலவே அவற்றின் நடைமுறை பற்றிய அனுபவங்கள் என்பவற்றை மோதுகை மாற்றுநிலையாக்கத்தினை ஏற்படுத்துவதற்கான அவற்றின் ஆற்றல்மீது விசேட கவனம் செலுத்தியவாறாக ஆராயும். நெருக்கடித்தவிர்ப்பு மற்றும் மோதுகை மாற்றுநிலையாக்கம் என்பவற்றை நோக்கியதான அபிவிருத்தி ஒத்துழைப்பானது செயல்திறன்மிகு முறையில் பங்களிப்புச் செய்யக்கூடிய எல்லையினைப்பற்றிக் கலந்துரையாடுகின்ற அபிவிருத்திக் கொள்கையின் அண்மைய கருத்தாடல் மீதே எழுத்தாளர்கள் கட்டமைத்துச் செல்கின்றனர்.



மோதுகை மாற்றுநிலையாக்கத்துக்கான ஒரு பங்களிப்பு என்கின்றரீதியில் அபிவிருத்தி உதவியின் வகிபாகம் பற்றிய நடப்பு விவாதங்கள் மூன்று கூட்டுத்தொடர்புடைய அணுகுமுறைகளின் ஒப்பீட்டுரீதியான பலங்கள் மற்றும் பலவீனங்களில் அடிப்படையில் கவனம் செலுத்துகின்றது.

- அன்டர்சனால் (1999) உருவாக்கப்பட்ட *தீங்கெதுவும் செய்யாதீர்கள்* எனும் அணுகுமுறையானது நல்லது செய்வதைவிட அதிக தீங்கு செய்வதைத் தவிர்ப்பதை அடிப்படை நோக்காகக் கொண்டுள்ளது. மேலும், இது அபிவிருத்தி உதவி கருதிச் செய்யப்படாத எதிர்மறைத் தாக்கங்கள் பற்றியும் கருத்திற் கொண்டுள்ளது. இவை பொதுவாக மோதுகையின் தீர்வுக்குப் பங்களிப்புச் செய்யாமல், அவற்றை உக்கிரமடையவே செய்யக்கூடியவை என்பதையும் அது சுட்டிக்காட்டுகின்றது.

  இந்த அணுகுமுறையானது அபிவிருத்தி நடவடிக்கைக்கான அமெரிக்க அ.சா.நிறுவன கூட்டினால் (CDA) ஐரோப்பா, ஆசியா, ஆபிரிக்கா மற்றும் இலத்தீன் அமெரிக்க நாடுகளின் 13 முரண்பாட்டுப் பிராந்தியங்களில் நடத்தப்பட்ட ஒரு பூரணமான கள ஆய்வின் அனுபவங்களை அடிப்படையாகக்கொண்டுள்ளது.

- *சமாதானத்துக்கான பிரதேச ஆற்றல்* அணுகுமுறையானது (அன்டர்சன் 1999, ஹெயின்ரிச் 1999) அபிவிருத்தி உதவியூடாக மோதுகை மாற்றுநிலையாக்கத்துக்கான மறைவான நுழைவு நிலைகளை அடையாளம் காண விழைகின்றது. மேலும், புறநிலைக்கொடை முகவர்கள் சமாதானத்திற்காக பிரதேச ஆற்றல்களுக்கு ஆதரவு வழங்குவதில் கவனம் குவிக்கவேண்டும் எனப் பரிந்துரைக்கிறது. சமாதானமானது வெளியே இருந்து திணிக்கப்பட முடியாதது, ஆனால் சமூகத்தின் உள்ளேயிருந்துதான் அது எட்டப்படவேண்டும் என்பதை இக் கருத்தியல் சுட்டுகின்றது.

- சமாதானம் மற்றும் மோதுகைத் தாக்கக் கணிப்பீடு பற்றிய பகுப்பாய்வானது (PCIA) (இந்த அத்தியாயத்தில் மார்க் ஹொப்மனின் பங்களிப்பைப் பார்க்கவும், புஷ் 1998, றோஸ் சூ ரொத்மன்

1999) மோதுகைச் சூழமைவின் பூரணமான பகுப்பாய்விற்கான தேவையினை வலியுறுத்துகின்றது. இதிலிருந்து சமாதானத்தின் மதிப்பீடு மற்றும் கணிப்பீடு மற்றும் மோதுகைத்தாக்கம் என்பவற்றுக்கான ஒரு முறையியலை இது உருவாக்குகின்றது. இம்முறையியல் சமாதான உருவாக்கத்துக்கான சட்டகத்தினை வழங்குகின்றது.

இந்த அத்தியாயமானது சமூகஅபிவிருத்தித்துறையின் சிக்கலான அவசர நிலைமைகளில் பணியாற்றுகின்ற பாரம்பரிய நிவாரண மற்றும் அபிவிருத்திச்செய்திட்டங்களின் நடைமுறை அனுபவங்கள்மீது கவனம் செலுத்தும். ஆசிரியர்கள் மோதுகை மாற்றுநிலையாக்கத்துக்கிடையில் உள்ள சிக்கலான தொடர்பின் தொடரினை ஒருபுறத்திலும், பங்கேற்புடனான வலுவூட்டல் அணுகுமுறைகளை மறுபுறத்திலும் ஆராயும்போதே, ஜனசமூக கட்டியெழுப்பலினுள்ளே பொதுவான வலுவூட்டல் அணுகுமுறைகளின் ஆற்றலினைத் தீவிரமாக மதிப்பிடுவார்கள். இதற்கான காரணம் பிரதேச மட்டத்திலே மோதுகை மாற்றுநிலையாக்கத்துக்கு தீங்கு செய்வதைத் தவிர்ப்பது மட்டுமன்றி, அதற்குத் தன்னிலையான பங்களிப்பினை வழங்குவதுமாகும். அத்தியாயத்தின் அனுபவ ரீதியிலான அடிப்படையானது பங்கேற்புடனான ஆராய்ச்சியிலும், இலங்கையிலே யுத்தத்தால் அழிவுற்ற பிரதேசங்களின் இருதரப்பு மற்றும் பல்தரப்பு அபிவிருத்தி ஒத்துழைப்பின் அனுபவங்களிலும் தங்கியுள்ளது.

பிரிவு II மற்றும் III ஆனவை மோதுகை மாற்றுநிலையாக்கக் கருத்தாடலின் அண்மைய அம்சங்களினை ஆராயும். இதிலே சிக்கலான அவசர நிலைமைகளிலே அபிவிருத்தி உதவியின் பாத்திரம் தொடர்பாக எடுக்கப்படக்கூடிய முடிவுகளுக்கு குறிப்பிட்ட கவனம் செலுத்தப்படும். பிரிவு 1v மற்றும் v ஆனவை சமூக அபிவிருத்தித் துறையினுள் சில பொதுவான பங்கேற்பு மற்றும் வலுவூட்டல் அணுகுமுறைகளை அறிமுகம் செய்யும். அவற்றின் கோட்பாட்டுரீதியிலான குறிக்கோள்களையும், அதேபோல அவற்றின் நடைமுறை அமுல்படுத்தல்களையும் விரிவாக விளக்கும். பிரிவு v1 ஆனது சிக்கலான அவசர நிலைமைகளிலே அபிவிருத்தி உதவியூடாக வலுவூட்டல் முறைவழிகளின் வசதிப்படுத்தலுக்காக செயற்பாடு நிகழ்வதற்கான களங்கள், அதேபோலவே கட்டுப்பாடுகள் இருமனப்போக்கு மற்றும் இக்கட்டுநிலை என்பவற்றைத் தீவிரமாக ஆராயும். ஆசிரியர்கள் வலுவூட்டல் அணுகுமுறைகளின் ஆற்றல், கட்டுப்பாடுகள், இக்கட்டுநிலை என்பவற்றின் எதிர்காலச் சாத்தியங்கள் குறித்துக் கூறி முடித்துள்ளனர். மேலும், அபிவிருத்தி உதவியானது வலுவூட்டல் மற்றும் அங்கீகரிப்புச் செயன்முறைகளினூடாக அதிகமாக அனைவரையும் உள்ளடக்குகின்ற சமூகத்தை ஏற்படுத்துகின்ற காரணத்தினால் அதற்கு அதிகமான அரசியல் வகிபாகத்தினையும் பரிந்துரைத்துள்ளனர்.



## 2. தடம் 111 அபிவிருத்தி உபாயங்களும் அதன் வகிபாகமும்

மோதுகைகளில் இடையிடுகை பற்றிய தற்போதைய கலந்துரையாடல்கள் மூன்று அடிப்படையான கருத்தாடல்களைக் கொண்டுள்ளன. ஒவ்வொன்றும் பல்வேறு மட்டங்களிலும், நடைமுறைகளிலும் கவனத்தைக் குவிக்கின்றன. பல்வேறு கோட்பாட்டு ரீதியிலான கலந்துரையாடல்களின்மீது கட்டமைக்கப்படுகின்றன. மோதுகையின் பல்வேறு விதமான விளக்கங்களில் கவனம் செலுத்துகின்றன. ஒவ்வொன்றும் நடவடிக்கைக்கான பல்வேறு உபாயங்களைப் பரிந்துரைக்கின்றன. (இந்த அத்தியாயத்தில் கோர்டுலா ரெயிமானின் பங்களிப்பினைப் பாக்க, மியால், ரம்ஸ்பொதாம், வூட்ஹவுஸ் 1999).

- மோதுகைத் தீர்வு கருத்தாடலானது மோதுகைத் தரப்பினர்களுக்கிடையில் அவர்களின் ஆயுத மோதுகையை முடிவாக்க இயலுமாக்குவதற்காக உடன்படிக்கை வடிவிலான விளைவின்பால் திசைமுகப்படுத்தும் அனைத்து உபாயங்களையும் மேற்கொண்டு வருகின்றது. ஆனால், உள்ளார்ந்த மோதுகைக் காரணத்தைக் அது அவசியம் கவனத்தில் கொள்வதில்லை. இங்கே நடைமுறையின்

வகைமாதியான விடயப் பரப்பானது-சுவடு 1- இராஜதந்திரிகளினதும், அரசாங்கச் செயல்நிறைவேற்றுநர்களினதும் உத்தியோகபூர்வமான மற்றும் முறையான நடவடிக்கைகளுக்காக அடிப்படையில் ஒதுக்கப்பட்டுள்ளது. எனவே அபிவிருத்தி உதவிபற்றிய இக் கட்டுரைக்கு அது குறிப்பிட்ட தொடர்பு அற்றதாகும்.

- மோதுகைத் தீர்வு கருத்தாடலில் சமூகத்தில் நிலவும் பண்பாடு, கட்டமைவு சார்ந்த வன்முறைகள் எவ்வாறு தோன்றுகின்றன என்பதனை அறிவது இதன் ஆய்வுப் பரப்பு கருத்தாடலினுள்ளே வரும். தடம் 11-ற்குரிய செய்முறை பரப்புகள் வகைமாதியான அரசசார்பற்ற தரப்பினர்களால் உத்தியோகபூர்வமற்ற, பலவந்தமற்ற நடவடிக்கைகளால் பிரதிநிதித்துவப்படுத்தப்படுகின்றன. அவ்வாறான செயல்முறைகளினைத் தூண்டுபவர்கள் பொதுவாக பிரஜைகள் இராஜதந்திரம் மற்றும் சிவில் இணக்குவிப்பு போன்றவற்றில் விசேட நிபுணத்துவம்கொண்ட சர்வதேச அத்துடன் / அல்லது பிரதேச மோதுகைத் தீர்வு அ.சா.நிறுவனங்கள் ஆகும். அவர்கள் பிரச்சினைதீர்க்கும் செயலமர்வுகள்போன்ற முறைவழிகளைப் பயன்படுத்துகின்றார்கள். அவர்களுக்கு மோதுகைப் பகுப்பாய்வில் கவனம் செலுத்தும் கல்வியியல் நிறுவனங்களும், சிவில் சமூகக் குழுக்களும் ஆதரவு வழங்குகின்றன.
- மோதுகை மாற்றுநிலையாக்க கருத்தாடலானது விளைவுகள், செயல்முறைகள் மற்றும் கட்டமைப்பு மாற்றங்கள் என்பவற்றின்பால் திசைமுகப்பட்ட நீண்டகால சமாதான உருவாக்க முயற்சிகளின் மீது கவனத்தை குவிக்கின்றது. அவை நேரடியான, கலாசார மற்றும் கட்டமைப்பு வன்முறையில் வெளிப்படுத்தப்படும் வடிவங்களை எதிர்கொள்ளல், சமூக உறவுகளினை மாற்றுநிலையாக்குதல், மற்றும் ஒத்துழைப்புமிகு தொடர்புகளை உருவாக்க உதவிசெய்யக்கூடிய நிலைமையை மேம்படுத்தல் என்பவற்றினை நோக்கமாகக்கொண்டுள்ளன.



இங்கே தடம் 111ன் ஆற்றுகையாளர்கள் பிரதேச அடிமட்டத்திலான நிறுவனங்கள், அதேபோலவே உள்நாட்டு மற்றும் சர்வதேச அபிவிருத்தி முகவர்கள் மற்றும் அ.சா.நி.கள் போன்றோர், வன்முறை மிகு மோதுகையின் விளைவுகளினால் மிகவும் பாதிக்கப்பட்ட தரப்பினரைக் கவனத்தில் கொள்ளுகின்றனர். அவர்கள் அடிமட்டப் பயிற்சி, ஆற்றல் உருவாக்கம் மற்றும் வலுவூட்டல், உள அதிர்ச்சி வடுச் சிகிச்சை, மனித உரிமைகள், அபிவிருத்திப் பணிகள் மற்றும் மனிதநேய உதவி ஆகியவற்றில் ஈடுபட்டுள்ளனர்.

இந்த மூன்று கருத்தாடல்களும், அவற்றின் இடையீட்டு உபாயங்களும் நிச்சயமாகவே ஒன்றுக்கொன்று தொடர்பு கொண்டவையாகும். அவை உள்நாட்டு சமாதான உறுப்பினர்களை உருவாக்குவதாயின் அல்லது பல்வேறுவிதமான பிரதேச, தேசிய மற்றும் சர்வதேச செயற்பாட்டாளர்களுக்கு இடையில் முக்கியமான கூட்டமைப்பை உருவாக்குவதாயின், செயற்பாட்டாளர்கள் மூன்று மட்டங்களிலுமான நடவடிக்கைகளை ஒன்றிணைக்கவேண்டும். முன்று உபாயங்களும் பரஸ்பரம் ஒன்றிணையக்கூடியவையாகவும் மற்றும் உதவிபுரியக்கூடியவையாகவும் இருத்தலைப் புரிந்துகொள்ளல் வேண்டும் (பார்க்க ரைமன், அதேஇடம்).

மோதுகை மாற்றுநிலையாக்கம் பற்றிய மூன்றாவது கருத்தாடல், சிக்கற்பாடு நிறைந்த அவசர நிலைமைகளில் அபிவிருத்தி உதவிச் விடயங்களுக்கு மிகவும் பொருத்தமானதாகும். மோதுகை மாற்றுநிலையாக்கத்துக்குப் பங்களிப்புச் செய்யவென வடிவமைக்கப்பட்ட உத்தேச இடையீடுகளின் சூழமைவில் அபிவிருத்தி உதவி வகிக்க வேண்டிய உரிய பாத்திரம் பற்றிய மேலதிக நுண்ணறிவை மோதுகை மற்றும் பொருளாதார ஒத்துழைப்பு மற்றும் அபிவிருத்தி (OECD/DAC 1997) க்கான அமைப்பின் அபிவிருத்தி உதவிக் குழுவின் சமாதானம் மற்றும் அபிவிருத்தி ஒத்துழைப்பு வழிகாட்டுதல்கள் வழங்குகின்றன. முதலில் நாம் மோதுகையின் பல்வேறு விதமான கட்டங்கள்

மற்றும் இயக்கவியல் என்பவற்றுக்கிடையில் உள்ள வேறுபாடுகளை பிரித்தறிய வேண்டும். இவை வேறுபட்ட வகையான இடையிடுகைகளை அவசியமாக்கும். நான்கு கூட்டுத் தொடர்புடைய கட்டங்களை DAC விளக்கிக் கூறுகின்றது:

- *அமிழ்ந்துபோன* பதற்றச் சூழ்நிலைகள் ;
- *அதிகரிக்கும் பதற்றச்* சூழ்நிலைகள் ;
- *பகிரங்க மோதல் மற்றும் வன்முறை மிகு மோதுகை* வெடிக்கும் கட்டங்கள் ;
- *நொருங்கக்கூடியதும் மாறுநிலைப்பட்டதுமான மோதுகை பின்வரு*நிலை.

பொதுவாகக் களத்தில் உள்ள சூழ்நிலையானது எவ்வாறாயினும் மிகச் சிக்கலானதாகவே இருக்கும்(பார்க்க பெட்டி 1). அதிகமான சந்தர்ப்பங்களில் ஒரு நிலையிலிருந்து இன்னொரு நிலைக்கான திடீர் நகர்வுகளை நாம் எதிர்கொள்கிறோம். மேலும் பல நாடுகளில் சமாதானம் மற்றும் மோதுகை ஆகிய இரண்டும் ஒரே நேரத்திலேயே உள்ளன. எனவே ஒன்றன் பின் ஒன்றாக முன் கூட்டியே எடுத்துக் கூறக்கூடிய முறையில் தர்க்க ரீதியாக ஒன்றன் பின் ஒன்று தோன்றக்கூடிய நிலைபேறுடைய சூழமைவிலும் பார்க்க ஒன்றுக்கு ஒன்று மாறுபடுகின்ற மோதுகை நிலைபற்றி பேசுவதே பொருத்தமாக இருக்கும். இவ்வாறான நிலைமைகளின்கீழ், அதிகரிக்கும் பதற்றத்தின் குறிகாட்டிகளை அவதானிப்பதற்கு, கொடைவழங்கும் முகவர்கள் பொருத்தமான சாதனங்களைக் கொண்டிருக்கவேண்டும். எனவே அவர்கள் மாறும் சூழ்நிலைகளுக்குத் தம்மை நெகிழ்வுபடுத்திக் கொள்ளக்கூடியதாக இருக்கும்.

**பெட்டி 1 : பல்வேறு விதமான மோதுகைச் சூழமைவு அல்லது பின்னனிகள்**

இலங்கையில், யுத்தத்தால் பாதிப்புற்றிருக்கும் வடகிழக்குப் பிரதேசங்களிலே அபிவிருத்தி இடையீடுகள் பொதுவாகப் பல வித்தியாசமான பிரதேச நிகழ்வுக்காட்சிகளுடன் இடம்பெறுகின்றன. இங்கே தமிழீழ விடுதலைப் புலிகளின் (LTTE) கட்டுப்பாட்டின்கீழ் விடுவிக்கப்படாத பிரதேசங்கள் இருக்கின்றன. விடுவிக்கப்பட்ட பிரதேசங்கள் இலங்கை இராணுவத்தின் நியாயாதிக்கத்தின் கீழ் இருக்கின்றன. அத்துடன் *பகுதி விடுவிக்கப்படாத* பிரதேசமும் இருக்கின்றது (எல்லைப் பிரதேசங்கள்). இப்பிரதேசத்தில் இரவிலே பகிரங்க மோதல்கள் தொடர்கின்றன.சூழ்நிலையானது ஒரு குறுகிய நேரத்திலே அதிகரிக்கும் பதற்றத்திலிருந்து வன்முறைமிகு மோதுகையாக க சடுதியாக மாறக்கூடியதாகும். நாட்டின் ஏனைய பிரதேசங்களிலே, பெருந்தோட்டத்துறைபோன்ற முன் மோதுகை அமைப்பைக் கொண்டது என வரைவிலக்கணப்படுத்தக் கூடிய பிரதேசங்களிலே (அமிழ்ந்த பதற்றச் சூழ்நிலை) அதாவது, தமிழ்த் தோட்டத் தொழிலாளர்களுக்கும், சிங்களப் பெருந்தோட்ட முகாமைத்துவத்துக்கும் இடையில் அடையாள மற்றும் தொழில் மோதுகை அதிகரிப்பதற்கான வாய்ப்பைக் கொண்ட பிரதேசங்களில் அபிவிருத்திச் செய்திட்டங்கள் மேற்கொள்ளப்படுகின்றன. நாட்டின் தெற்கிலே, அபிவிருத்திச் செய்திட்டங்கள் மோதுகைக்குப் பின்னுள்ள பிரதேசங்களிலேயே வழமையாக மேற்கொள்ளப்படுகின்றன. இங்கே அடிப்படைவாத இடது சாரிக் கட்சியான ஜனதா விமுக்தி பெரமுன (ஜே.வீ.பி) ஏற்படுத்திய வன்முறைமிகு கிளர்ச்சிகளின் மூலகாரணங்களுக்குத் தீர்வு எட்டப்படவில்லை. இக் கிளர்ச்சிகள் அரச படைகளினால் அடக்கப்பட்டன.

இம்மோதுகை அமைப்புகள் உள்ளார்ந்தரீதியில் சக்திமிக்கவையாக இருக்கின்றமையினால், பல்வேறு வகையான இடையீடுகள்- அவசர நிவாரணங்கள், புனர்வாழ்வு மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகள் அதிகமான சந்தர்ப்பங்களில் சமகாலத்திலேயே இடம்பெறுகின்றன. திட்டவட்டமாக இக் காரணத்திற்காகவே பல கொடை வழங்கும் முகவர்கள் அபிவிருத்தி நோக்கினை உள்ளடக்கிய அவசரகால உதவி என்கின்ற எண்ணக்கருவை அறிமுகப்படுத்த முன்வந்துள்ளனர். அதாவது, நிவாரணத்தினை நடுத்தர மற்றும் நீண்ட கால அபிவிருத்தி முயற்சிகளுடன் இணைக்கின்றனர். விசேடமாக, மோதுகை மாற்றுநிலையாக்கத்தில் தாக்கத்தினை ஏற்படுத்துவதை நோக்கமாகக் கொண்ட இம் முகவர்கள் மனிதநேய உதவி, வறுமை ஒழிப்பு மற்றும் நிலைபேறான அபிவிருத்தி ஆகியவற்றின் பாரம்பரியமான தமது பணிக் கட்டமைப்பு முறைமைக்குள் சமாதான உருவாக்கத்தினை ஏற்றுக்கொள்ள வைப்பதை நோக்கிய ஒரு பூரணமான அணுகுமுறையை எடுக்க முயல்கின்றனர் (இந்த அத்தியாயத்தில் மார்க் ஹொப்மனின் பங்களிப்பைப் பார்க்க).

டிஏசி (DAC) வழிகாட்டுதல்களிலே, (OECD/DAC 1997, ப.9) சிக்கலான அவசர நிலைமைகளிலே அபிவிருத்தி உதவியானது பின்வருமாறு வரையறை செய்யப்பட்டுள்ளது:

> *கூட்டிணைவு அபிவிருத்தி முயற்சிகள் நிலைபேறுடைய அபிவிருத்திக்கான அடிப்படையாக, அதாவது பேண்தகு அபிவிருத்திக்கான அடிப்படையாக அமைவு நிலைப்பட்ட நிலைபேறுடைய ஒரு சூழலுக்காக பாடுபட வேண்டும். கட்டமைப்புரீதியாக உறுதிபெற்ற சூழலிலேயே மாற்றங்களைக் கையாளக்கூடியதும், வன்முறையில் தஞ்சம் புகாமல் பிணக்குகளைத் தீர்க்கக்கூடியதுமான ஆற்றல்பெற்ற, சக்திமிக்க, முன்மாதிரியானதுமான சமூக மற்றும் அரசியல் கட்டமைப்புக்கள் காணப்படுகின்றன. நீண்டகால அடிப்படையிலே மோதுகையின் மூல காரணங்களை இல்லாதொழிப்பதற்கும், பிணக்குகளைச் சமாதானமான முறையில் கையாளுவதற்கும், தீர்ப்பதற்கும் வேண்டிய ஆற்றலை நிறுவனங்கள் பெறுவதற்கும் இது பங்களிப்புச்செய்யும்.*



அபிவிருத்தி இடையீடுகள் பங்கு நாடுகளின் பொதுவான பொருளாதார மற்றும் சமூகச்சூழ்நிலைகளை முன்னேற்றுவதிலும், அரசின் தகவுநிலை மற்றும் செயற்திறன் ஆகியவற்றை முன்னேற்றுவதற்கான முயற்சிகளுக்கு ஆதரவு வழங்குவதிலும் கவனம் செலுத்தவேண்டும். அதேபோலவே ஓர் உறுதியான சிவில் சமூகத்தின் உருவாக்கத்திற்கும் உதவவேண்டும். நிலைபேறான அபிவிருத்திக்கான ஓர் அடிப்படையாக, ஜனநாயகக் கட்டமைப்புசார் உறுதிப்பாட்டினை மேம்படுத்துவது செய்திட்டப் பணியினுள் பங்கேற்பு மற்றும் வலுவூட்டல் அணுகுமுறைகளின் அறிமுகத்தினூடாக வசதிப்படுத்தப்படுகின்றது.

மொத்தநோக்கமே பல்வேறு சமூகக்குழுக்களை ஒருங்கிணைப்பதாகும். விசேடமாகப் பெண்கள் மற்றும் இளைஞர் போன்ற வன்முறைக்கு எதிராகச் செயற்படுபவர்களை அல்லது ஒதுக்கப்பட்டவர்களை பிரதேச அபிவிருத்தித் திட்டமிடல் மற்றும் பேச்சுவார்த்தைகளின் தீர்மானம் மேற்கொள்ளும் செயன்முறையில் ஒன்றிணைப்பதாகும். சமூகத்தின் உள்ளே போட்டியிடும் நலன்களுக்கு இடம்கொடுப்பதற்கு அத்தியாவசியமான நிறுவனங்களையும், வழிமுறை அமைப்புக்களையும் விருத்திசெய்வதையும், அதேபோல சமூக-அரசியல் பிணக்குகளைச் சமாதானமான முறையில் தீர்ப்பதையும் இந்த அபிவிருத்தி இடையீடுகள் நோக்கமாகக் கொண்டுள்ளன (அதேஇடம், ப. 18). "ஜனநாயகமயமாதலை ஊக்குவிப்பதானது ஒரு சிக்கலான, படிப்படியான மற்றும் பங்கேற்புடனான செயல்முறையாகப் பார்க்கப்படுகின்றது. அதிலே, பிரஜைகளும், சிவில் சமூகமும், அரசும் தமது தொடர்புகளை முன் கூறக்கூடியதும், பிரதிநிதித்துவம் மிக்கதும், நியாயமானதுமான முறையில் இணக்குவிப்புச் செய்வதற்காக நியமங்கள், பெறுமானங்கள் மற்றும் நிறுவனங்களினைக்கொண்ட தொகுதி ஒன்றினை உருவாக்குகின்றனர்" (அதேஇடம், ப. 38).


சமூக அடிப்படையிலான நிறுவனங்களுடனான சமூக மட்டம் மற்றும் உள்;ராட்சி நிறுவனங்களினதும், அ.சா.நிறுவனங்களினதும் இடைமட்டம் போன்றவை உள்ளடங்கிய பல்வேறு மட்டங்களினை அபிவிருத்தி உதவி நோக்கமாகக் கொண்டிருக்கவேண்டும் என்பதே இதன் அர்த்தமாகும். அதே வேளையில் இடையீட்டின் முழுமையான உபாயத்திற்காக மோதுகைச் சூழமைவின் பெருநிலைப்பரிமாணத்தையும் கருத்திற் கொள்ளவேண்டும். அது பெரும்பான்மை சமூகத்தில் பங்கேற்பினை முனைப்புடன் மேம்படுத்தவேண்டும். ஆனால், அ.சா.நிறுவனங்கள், சமூக அடிப்படையிலான நிறுவனங்கள் (CBOs), உள்;ராட்சி நிறுவனங்கள் ஆகியன இன்னும் ஆற்றல்மிக்கவையாக உருவாகுவதற்கும், அவர்களின் சேவைகளைப் பெறுவோருக்கு சிறப்பான பதிற்செயற்பாடு வழங்குவோராக ஆவதற்கும் உதவுவதற்கு ஆதாரம் வழங்க வேண்டும். படம் 1, அபிவிருத்தி இடையீட்டின் பல்வேறு மோதுகைப் பரிமாணங்களினைக் காட்டுகின்றது. பெருநிலை மோதுகை மற்றும் கிராமியச் சமூகம் ஆகியவற்றின் கூட்டுத்தொடர்பு அதிலே கோடிட்டுக் காட்டப்படுகின்றது.

சமூக மட்டத்திலே சமாதான உருவாக்கம் மற்றும் மீளிணக்கம் என்பவற்றுக்கான நீண்டகால ஆதரவுக்குத் தற்போது இருக்கின்ற தேவையினை DAC வழிகாட்டுதல்கள் (அதேஇடம், ப 52) வலியுறுத்துகின்றன. அதேபோலவே, பிராந்திய நிறுவன மட்டத்திலே நல்லாட்சியின் சமாதான உருவாக்க மூலகங்களினை வலுப்படுத்துவதற்கான சமகால மற்றும் தொடர்ச்சியான முயற்சிகளின் தேவையையும் வலியுறுத்துகின்றன.

சமுதாயத்தைக் கட்டியெழுப்புவதில் பொதுவாகப் பயன்படுத்தப்படும் பங்கேற்புமிக்கதும், வலுவூட்டுகின்றதுமான அணுகுமுறைகளினை உன்னிப்பாகப் பார்ப்பதற்குமுன்பாக, மோதுகை மாற்று நிலையாக்கத்தின் கோட்பாட்டு ரீதியிலான ஆதரவு விரிவாக ஆராயப்படல் வேண்டும். விசேடமாக, வலுவூட்டலின் வாதமானது (பிரதேச) எந்த அளவுக்கு அபிவிருத்தி முகவர்களின் வாதத்துடன் ஒத்திசைவாக உள்ளது என்பது ஆராயப்படல் வேண்டும்.



படம் 1 : பேரியல்பு மோதுகை மற்றும் கிராமிய சமூகங்களின் கூட்டுத்தொடர்பு



# 3. உள்ளூர் வலுவாக்கலின் தர்க்கமும், அபிவிருத்தி முகவர் நிலையங்களினது தர்க்கமும்

மோதுகை முகாமை எனும் சொற்பதமானது பொதுவாகவே விளைவு நோக்கிய சகல அணுகுமுறைகளுக்குமான ஒரு குடைக் கருத்தியலாகப் பயன்படுத்தப்படுகின்றது. இந்த அத்தியாயத்தில் ஆசிரியர்கள் அதே நடைமுறையினையே பின்பற்றுகின்றார்கள். மறுபுறத்திலே, மோதுகை மாற்றுநிலையாக்கமானது மோதுகை முகாமை முறைமையாற்றலில் இருந்து வலுவூட்டலின் அடிப்படையில் அமைந்த (பிரதேச) முறைமையாற்றலுக்கான நகர்வினை வழமையாக ஒருங்கிணைக்கின்றது. சிக்கலான அவசரநிலைகளில் அபிவிருத்தி உதவியின் பாத்திரத்திற்கான சில தாற்பரியங்களை இந்நகர்வின் கோட்பாட்டு ரீதியிலான ஊகங்கள் கொண்டுள்ளன. அனுமானிக்கப்பட்ட வலுவூட்டலின் (பிரதேச) முறைமையாற்றலானது எந்த அளவுக்கு அபிவிருத்தி முகவர்களின் தெளிவுபடுத்திக் காட்டப்பட்ட முறைமையாற்றலுடன் ஒத்திசைகின்றது என்கின்ற வினாவே குறிப்பாகப் பொருத்தமுடையதாகும்.

## 3.1 முகாமையின் தர்க்கப்பாடு

மோதுகை இடையீட்டின் பகுப்பாய்விற்கான ஒரு பயன்மிகு கட்டுக்கோப்பு ரொத்மன் மற்றும் பிரைட்மனினால் (2001) கொடுக்கப்பட்டுள்ளது. இந்த அணுகுமுறையானது மோதுகையின் பல்வேறுவிதமான கட்டுக்கோப்புகளுக்கு இடையிலான வேறுபாடுகளையும், வளங்களின் மோதுகைகளுக்கு இடையிலான வேறுபாடுகளையும் கண்டறிகின்றது. வளங்களின் மோதுகைகள், நலன்களின் மோதுகைகள், மற்றும் அடையாளங்களின் மோதுகைகள், இவ்வேறுபடுத்தலானது மேலே அறிமுகப்படுத்தப்பட்டுள்ள மூன்று விதமான மோதுகைக் கருத்தாடல்களின் (மோதுகை முடிவுறுத்தல், மோதுகைத் தீர்வு மற்றும் மோதுகை நிலைமாற்றம்) தர்க்கத்தை பேணி தொடர்ந்து செல்கின்றது. இதிலேயுள்ள மையக் கூறு, மூன்று வெவ்வேறு வகையான மோதுகைகள் இருக்கின்றன என்பதல்ல. ஆனால், ஒவ்வொரு மோதுகையும் மூன்று கட்டுக்கோப்புகளினது பரிமாணங்களுக்கு சான்றுபகரும் என்பதேயாகும். எந்த மோதுகையிலும் மிகவும் தெளிவான பரிமாணங்கள் எவ்வாறு ஒருவர் அதைப் புரிந்துகொள்கின்றார் மற்றும் அதை நோக்குகின்றார் என்பதில் தங்கியுள்ளது.

428

- *வளங்களின் மோதுகைக் கட்டுக்கோப்பானது* மோதுகையை அரிதான அந்தஸ்து அதிகாரம் மற்றும் வளங்கள் என்பவற்றுக்கான கோரிக்கைகளின்மீதான போராட்டமாகவே பார்க்கின்றது. மோதுகை என்பது ஓர் அச்சுறுத்தல் அல்லது ஒரு நோய்போன்ற எதிர்மறையான ஒரு சக்தியாகவே புலனுணரப்படுகின்றது. தனிப்பட்டவர்கள் மற்றும் குழுக்கள் மத்தியில் சடத்துவப் பொருட்கள், பொருளாதார நன்மைகள், ஆதனம் மற்றும் அதிகாரம் என்பவற்றுக்காக ஏற்படும் போட்டியின் ஓர் இயற்கையான விளைவே மோதுகையாகும். இக்கட்டுக்கோப்பினுள்ளே, வன்முறைக்கான மாற்றீடு, மோதுகையினை சிலவகை பேச்சுவார்த்தை அல்லது பேரம்பேசல் முறைவழி மூலம் முடிவுறுத்துதலாகவே இருக்கமுடியும். இது சம்பந்தப்பட்ட சகல தரப்பினரும் பரஸ்பரம் திருப்தி அடையும்வகையில் வளங்கள் மீள்விநியோகிக்கப்படும்வரை தொடரும். இதன் விளைவு பொதுவாக சாதகமான / பாதகமான அல்லது விட்டுக்கொடுக்கின்ற சூழ்நிலையாக இருக்கும். இந்த வளக் கட்டுக்கோப்பினுள்ளே மோதுகையின் உள்ளார்ந்த காரணங்கள் தொடர்ந்தும் தீர்க்கப்படாமலிருக்கின்றன. மேலும் புறக்கணிக்கப்படுகின்ற ஆழமான பிரச்சினைகள் மீண்டும் வெடிக்கலாம் என்பது ஒரு பிரச்சினைக்குரிய விடயமாகும்.
- *மோதுகையின் நலன் கட்டுக்கோப்பானது* போட்டிமிகு வளக் கட்டுககோப்பிடல் எனும் எண்ணப்போக்கினை மறுக்கின்றது. வளங்களுக்கான கோரிக்கைகள் என்றரீதியில் மோதுகைகள் உட்பொருள் கொண்டிருந்தாலும், வெளிப்படுத்தப்படுகின்ற பேரம்பேசும் நிலைப்பாடுகள் ஒருவர் தேவைகள், விருப்புகள் மற்றும் அச்சங்கள் என மீள்வரையறை செய்யக்கூடிய நலன்களின் அண்ணளவான உறுதியான வெளிப்பாடேயாகும் (பிஷர் மற்றும் யூரி 1981). *மாற்றீடான பிணக்குத் தீர்வு* எனும்

சிந்தனைப்போக்கானது நலன் அடிப்படையிலான பேரம்பேசுதலின் முறைவழியினை உருவாக்கியுள்ளது. இது ஒவ்வொரு தரப்பினரும் எதை உண்மையாகவும், சட்டபூர்வமாகவும் தேடுகின்றனர் என்பதைத் தெளிவாக இணைப்பதில் கவனம்செலுத்தி, பின்பு இருதரப்பினரதும் நலன்கள் பூர்த்திசெய்யப்படக்கூடிய பிரமாணத்தினை அதிகரிப்பதற்காக எதிராளிகளுடன் இணைந்து பணியாற்றுவதற்கான ஆக்கபூர்வமான வழிமுறைகளைப் பயன்படுத்துகின்றது.

- *அடையாள மோதுகைக் கட்டுக்கோப்பானது* எளிதில் கையாளமுடியாத இனமோதுகையைக் கையாளுவதற்கான நீண்டகால முயற்சிகளில் இருந்தே பெருமளவுக்கு எழுந்துள்ளது எனக் கூறலாம். இது சர்வதேச ராஜதந்திரத்தின் நிலையான அதிகார அரசியல் மாதிரிக்கு மாற்றீட்டு அணுகுமுறைகளை வேண்டி நிற்கின்றது. (ரொத்மன் மற்றும் பிரைட்மன் 2001, ப 590). இங்கே மோதுகை என்பது ஒவ்வொரு தரப்பினரதும் தேவைகள், விருப்புகள், அக்கறைகள் மற்றும் அச்சங்கள் என்பவற்றின் இயற்கையான புறவளர்ச்சியாக இனங்காணப்படுகின்றது.

நலன்களின் கட்டுக்கோப்பானது மோதுகை பற்றி மிகுந்த சாதகமான பார்வையை வழங்குகிறது. அவ்வாறான கலந்துரையாடலில் ஈடுபடுவது மோதுகைத் தரப்பினர் தமது சொந்த நலன்கள் மற்றும் புலன் உணர்வுகள் என்பவற்றைத் தெளிவுபடுத்திக்கொள்ள பொதுவாக உதவுவதுடன் மற்றைய தரப்பினரது நலன்கள் மற்றும் புலன் உணர்வுகளைப் புரிந்து கொள்ளவும் உதவுகின்றது. இக் கட்டுக்கோப்பானது பரஸ்பரம் திருப்தியளிக்கும் உடன்பாடுகளைக் காணும் அதன் முயற்சியிலே மிகவும் வெற்றிகரமாகக் காணப்படுவதுபோல் தோன்றினாலும், நலன் அடிப்படையிலான மோதுகைத்தீர்வானது பொதுவாகவே மோதுகையின் உள்ளார்ந்த தன்மையை இருட்டடிப்புச்செய்யலாம் என்பதே அதுபற்றிக் கூறப்படுகின்ற பிரதான விமர்சனமாகக் காணப்படுகின்றது. இவ்வகையான மோதுகைத்தீர்வு தனிப்பட்டவர்களை மாற்றுவதிலும், கூட்டுச் செயற்பாட்டு உபாயங்களிலும் கவனம் செலுத்துகின்றது. ஆனால், ஒவ்வொரு தரப்பினரதும் உள்ளார்ந்த பெறுமானங்களையும், நியமங்களையும் அடிப்படையில் மாற்றாமல் அப்படியே விட்டுவிடுகின்றது.

வளங்களின் கட்டுக்கோப்பு (மோதுகை முடிவுறுத்தல் கருத்தாடல், மற்றும் நலன்களின் கட்டுக்கோப்பு, மோதுகைத் தீர்வு நீளுரை) ஆகிய இரண்டும் அவற்றிலே மோதுகை முகாமையின் சில குறிப்பிட்ட முறைமையாற்றலைக் கொண்டிருக்கின்றன. மோதுகைகளின் எந்த இறுதித்தீர்வும் யதார்த்தமற்றது என்றே இந்தப் பகுப்பாய்வில் நாம் ஊகிப்போம். எனவே முகாமையிலும், பகைமை பரவுவதைக் கட்டுப்படுத்துவதிலும், எதிராளிகளை ஒன்றாகச் சேர்ப்பதற்கான ஆக்கபூர்வமான வழிகளைக் கண்டுபிடிப்பதிலும், வன்முறையைப் புறந்தள்ளிவைக்கக்கூடிய விட்டுக்கொடுப்புமிக்க அல்லது இருதரப்புக்கும் சாதகமான சூழ்நிலையை அடையும் நோக்கத்திலும் முயற்சிகள் மையம்கொண்டிருக்கவேண்டும் (இந்த அத்தியாயத்தில் ஹியூ மியாலின் பங்களிப்பைப் பார்க்கவும்).

மிகவும் வெற்றிகரமான மோதுகைத் தீர்வு கருத்தாடல்கள் மோதுகைகளை இதேவழியிலேயே கையாள இன்னும் முயற்சிக்கின்ற அதேவேளை, நிலைப்பாடுகளை மீள்கட்டுக்கோப்பிடுவதிலும், இருதரப்புக்கும் சாதகமான சூழ்நிலைகளை அடையாளம்காண்பதிலும் கவனம் செலுத்துகின்றன. மோதுகை முகாமையின் முறைமையாற்றலானது மோதுகைகளைக் கையாளுவதற்கான அடிப்படையிலேயே நடைமுறைப் பண்புமிக்க முறையாகும். அது மோதுகையின் மூலகாரணங்களையும், மோதுகைத் தரப்பினரின் உள்ளார்ந்த பெறுமானங்கள், நியமங்கள் மற்றும் அச்சங்கள் என்பவற்றையும் அவசியமாகத் தேடுவதில்லை.

## 3.2 (உள்ளூர்) வலுவாக்கலின் தர்க்கப்பாடு

அடையாளம் என்கின்ற ரொத்மன் மற்றும் பிரைட்மனின் மூன்றாம் கட்டுக்கோப்பு (எந்த மோதுகை மாற்றுநிலையாக்க நீளுரையாடலுக்கும் முக்கியமானது) மோதுகை முகாமையின் தர்க்கவியலில் இருந்து விலகிய (பிரதேச) வலுவூட்டலின் தர்க்கவியலை நோக்கிய ஒரு நெறி உதாரண மாற்றத்தினைக்

கொண்டுள்ளது. அதிகமான கையாளப்படமுடியாத மோதுகைகள், தனிப்பட்ட மற்றும் கூட்டு அடையாளங்களின் கருத்து வெளிப்பாடுகள் மற்றும் மோதல்கள் பற்றியதே என்பதை இந்த மாதிரி அடையாளம் காண்கின்றது. இவ்வாறான மோதுகைகள் தமது மூலத்தினை கௌரவம், அங்கீகாரம், பாதுகாப்பு, கட்டுப்பாடு, நோக்கம் மற்றும் செயற்படுத்தும் திறன் போன்ற ஆழமாக வேரூன்றிப்போயுள்ள மனிதத்தேவைகளுக்கு இருக்கும் அச்சுறுத்தல்களில் அல்லது அவற்றின் வெறுப்பில் கண்டு கொள்கின்றன(அஜார் 1990 பேர்டன் 1990).

அடையாளச்சட்டகத்தினுள்ளே பணிபுரிகின்ற பகுப்பாய்வாளர்கள், மோதுகைகளைத் தீர்க்கப்படவேண்டிய பிரச்சினைகளாகவோ அல்லது கட்டுப்படுத்தப்படவேண்டிய பிரச்சினைகளாகவோ பார்ப்பதில்லை. மாறாக, மோதுகைகள் வளர்ச்சிக்கும், கற்றலுக்கும் மற்றும் மாற்றியமைத்தலுக்கும் வாய்ப்புக்களை வழங்குகின்றன என வாதிடுகின்றனர் (லெடராச் 1995). சகலதரப்பினரும் தமது தேவைகள் மற்றும் பெறுமானங்கள் பற்றிய தெளிவாக்கல்களைத் தாமே பெற்றுக்கொள்வதற்கு மோதுகைகள் இட்டுச்செல்கின்றன. இதன்மூலமாக அவர்களுக்கு அதிருப்தியையும், திருப்தியையும் எவை தோற்றுவிக்கின்றன என்பதை அவர்கள் சிறப்பாகப் புரிந்துகொள்ள அது உதவுகின்றது (பருச் புஷ் மற்றும் பொல்ஜர் 1994).

எனவே, மோதுகைபற்றிய விடயங்களின் ஈடுபாடானது சுயபிரதிபலிப்புவகைக் கலந்துரையாடல்களைக் கொண்டிருக்கவேண்டும். அதிலே எந்தவிதமான பேச்சுவார்த்தையும் வெற்றிபெறலாம் என எதிர்பார்க்கப்படுவதற்கு முன்பே மோதுகை கொண்டிருக்கின்ற தரப்பினர் தமது தேவைகள் மற்றும் பெறுமானங்கள்பற்றி வெளிப்படையாகத் தமது எதிர்த்தரப்பினருக்கு முன்பாகப் பேசுகின்றனர்.

*அங்கீகாரமும்,வலுவூட்டலும் பிரதான முறைவழி*களாகும். மற்றையவர்களின் கருத்துவெளிப்பாடுகளை அங்கீகரிப்பதன்மூலமும், சுயத்தின் துணிபுரைமூலமும் மோதுகையானது பரஸ்பர நிலைமாற்றத்துக்கும், வலுவூட்டலுக்கும் வாய்ப்பினை வழங்குகின்றது (அதேஇடம்) அடையாள கட்டுக்கோப்பின் கண்ணோட்டத்திலிருந்து பார்க்கையில், இடையீட்டின் இலக்கானது வெறுமனே உடன்படிக்கைகளையும், தீர்வுகளையும் எட்டுவதல்ல. மாறாக, மோதுகை நடவடிக்கைகளில் ஈடுபடும் முறைவழியானது தற்போது காணப்படுகின்றவாறான நிலைக்கு சவால்விடுப்பதற்கான ஒரு வாய்ப்பாகவும், முறைவழியிலே சமாதானத்திற்காக பிரதேச ஆற்றலைக் கட்டியெழுப்புவதாகவுமே பார்க்கப்படுகின்றது (தரப்பினர் தாமே உள்ளடங்கலாக) (ரொத்மன் ரூ பிரைட்மன் 2001 ப 592).

வலுவூட்டலின் (பிரதேச) தர்க்கவியலானது சமூகநீதிக்கான பிரதேசப் போராட்டங்களினையும், அதனால் ஏற்படுகின்ற அடிப்படையான கட்டமைப்பு மாற்றத்தையும் ஆதரிப்பதை அல்லது உருவாக்குவதை மட்டும் நோக்காகக்கொண்ட கீழ்-மேல் உபாயங்களை வலியுறுத்துகின்றது. எனவே, மோதுகை மாற்று நிலையாக்கம் என்பது அகிம்சைச் செயற்பாடுகளின் கோட்பாட்டுரீதியிலான கட்டுக்கோப்பின்மீதே உருவாகின்றது. மேலும், மோதுகையை சமூகநீதிக்கான ஒரு அகிம்சைப் போராட்டமாகவே அது நோக்குகின்றது. ஊர்வலங்கள், பகிஷ்கரிப்புகள் அல்லது ஒத்துழையாமை போன்றவற்றின்மூலம் வெளிப்படுத்தப்படுகின்ற அகிம்சைப்போராட்டமானது, சமூக மற்றும் கட்டமைப்பு மாற்றத்தைக் கொண்டுவருவதற்கான மக்கள் சக்தியின் காத்திரமான வெளிப்பாடுகளாகும்.

எனவே, மோதுகைமாற்றுநிலையாக்கக் கருத்தாடல்களிலுள்ள நீடித்த வன்முறைமிகு மோதுகைகள் சமமற்றதும், அடக்குமுறைமிக்கதுமான சமூக மற்றும் அரசியல் கட்டமைப்புக்களின் இயற்கையான விளைவுகளாகவே உணரப்படுகின்றன. இதனால், வன்முறைமிகு மோதுகையினைச் செயல்திறன் மிகு முறையிலே கையாளுவதானது ஒதுக்கப்பட்ட குழுமங்களை அகிம்சைப்போராட்ட வடிவிலே வலுவூட்டுவதையும், அங்கீகரிப்பதையும் கோரும். வன்முறையை முடிவுக்குக் கொண்டுவந்து, நேர்மைமிக்க பேச்சுவார்த்தைகளைத் தொடங்குவதற்கு அவசரமாகக் கவனத்திற் கொள்ளப்படவேண்டிய

விடயங்களைப் பிரதேசமட்டத்தில் கையாளுவதற்கு அல்லது தடம் 1 இன் (சுவடு 11இன் செயற்பாட்டாளர்கள் மீது பொருத்தமான அழுத்தத்தினைப் பிரயோகிப்பதற்கு இந்த வழி மட்டுமே சாத்தியமானதாகவிருக்கும் (இந்த அத்தியாயத்திலே றெயிமானை பார்க்கவும்).

தடம் 111ன் உபாயங்கள் இதுவரை முன்நிலைப்படுத்தப்படாத சிவில்சமூகத்தை முன்னிலைப்படுத்தி அந்த மக்களையும் அவர்களின் போராட்டத்தையும் மைய மேடைக்கு கொண்டு வருகின்றது. இதனால் அது பிரதேச சமாதானச் செயல்முறையிலே பிரதான பாத்திரம் வகிப்பதாக காணப்படுகின்றது.

மோதுகை மாற்றுநிலையாக்க அணுகுமுறையில் காணப்படும் நியாய எடுத்துக்காட்டு முறைமையின் சிறப்பம்சம் யாதெனில், அதன் விளைவு, முறைவழி மற்றும் மாற்றத்துக்கான திசைமுகப்படுதல் ஆகியவைவையே ஆகும்.


- மோதுகை மாற்றுநிலையாக்கத்தின் இறுதி நோக்கமானது மோதும் தரப்பினரின் உள்ளார்ந்த தேவைகளுக்கு, மற்றும் அச்சங்களினால் எழுப்பப்படுகின்ற பொருண்மைவாத விடயங்களுக்கு முடிவுகளைக் காண்பதாகும் (விளைவின்பால் திசைமுகப்பட்ட). இதிலே இரண்டு நேரடியான தாற்பரியங்கள் இருக்கின்றன: முதலாவது, முறைவழி நோக்கியது, அதாவது: தரப்பினர்களுக்கு இடையில் ஒத்துழைப்பையும், தொடர்பாடலையும் இயலுமாக்குவதற்கு தரப்பினர் மத்தியில் உள்ள பரஸ்பர எதிர்மறையான மோதுகை மனப்பாங்குகளையும், பேறுமானங்களையும் இடையீட்டாளர்கள் மாற்றவேண்டியிருக்கும்.

- இரண்டாவது, மாற்றத்தினை நோக்கியது. அதாவது சலுகைமறுக்கப்பட்ட குழுமங்களை வலுவூட்டி அங்கீகரித்து, அதன்மூலம் மோதுகையில் சம்பந்தப்பட்டுள்ள தரப்பினர்களின் நலன்களுக்கு அப்பால் சமூகநீதியைப் போஷிக்கவும், இயலுமாக்குவதற்குமாக ஒரு புதிய உட்கட்டமைப்பினை உருவாக்குவதற்கான அரசியல் கட்டாயத்தினை இது அங்கீகரிக்கின்றது(அதேஇடம்).

- மோதுகை மாற்றுநிலையாக்கத்தின் அணுகுமுறையை அது வலுவூட்டலின் (பிரதேச) தர்க்கவியலில் தங்கியுள்ளவாறாக முடிவுகளைத் திறந்த, நீண்டகால, பல்-தட மற்றும் இயக்கவியல் முறைவழியாகப் பார்க்க முடியும். இக்காரணத்தினால் அது ஈடுபடுகின்ற செயற்பாட்டாளர்களின் எல்லைகளைக் குறிப்பிடத்தக்க அளவு விரிவாக்குகின்றது. தனிப்பட்ட மற்றும் தொடர்புரீதியான மட்டங்களில் அடிப்படைத்தேவைகள் பூர்த்திசெய்யப்படுதலானது, மோதுகையை மாற்றுநிலையாக்குவதற்கு உண்மையிலேயே போதாது என அவர்கள் புரிந்துகொள்கின்ற காரணத்தினால், செயற்பாட்டாளர்கள் நீண்டகால சமூகப் புனர்நிர்மாணம் மற்றும் இணக்கப்பாடு என்பவற்றின் நோக்கத்துடன் வளங்களுக்கான சமமான பெறுவழிக்கும், உட்கட்டமைப்பினை ஒன்று சேர்ப்பதற்குமான பெரும் இலக்கினைக்கொண்டும் பணியாற்றவேண்டும். இது பெரும் கட்டமைப்புரீதியிலான சமமின்மைகளைக் கருத்திற்கொள்வதைச் சாத்தியப்படுத்தும் (அதேஇடம்).

மோதுகையின் வளக் கட்டுக்கோப்பும், நலன் கட்டுக்கோப்பும்பல நடைமுறைப்படுத்துநர்களினதும், ஆராய்ச்சியாளர்களினதும் சிந்தனையில் தொடர்ந்தும் ஆதிக்கம் செலுத்தி வருகின்றன என்பதை ரொத்மன் மற்றும் பிரைட்மன் (2001, ப 593) ஆகியோர் சுட்டிக்காட்டியுள்ளனர். மேலும் இம்மரபுரீதியிலான அறிவானது மிகுந்த புத்தாக்கமுள்ள அணுகுமுறைகளின் புதிய சிந்தனைகளையும், அபிவிருத்தியையும் தொடர்ந்தும் மட்டுப்படுத்துகின்றது. பொதுவாகவே, மோதுகையின் உள்ளார்ந்த காரணங்களில் முனைப்புடன் பணியாற்றி, அத்துடன் உள்ளார்ந்த நியமங்கள், பெறுமானங்கள், அக்கறைகள் மற்றும் அச்சங்கள் என்பவற்றை நன்கு புரிந்துகொள்வதற்காக ஆழமாக ஆராய்வதற்கு மாறாக, நிபுணர்கள் மோதுகைத் தவிர்ப்பு அல்லது குறைப்பு என்பவற்றின் உத்திகளுக்கே விருப்பம் காட்டக்கூடியவர்களாக இருந்துவருகின்றனர்.

உருவம் 22: அதிகாரமளித்தல் மற்றும் அங்கீகரித்தல் பல்வேறு மோதுகை வடிவம் மற்றும் கற்கைகள் சுட்டிக்காட்டுவது போல்




432

வெற்றிகரமான மோதுகை இடையீடு, தொடர்பாடலுக்கும், கலந்துரையாடலுக்கும் வாய்ப்புக்களையும், தளங்களையுமே முதலில் உருவாக்கவேண்டும். அதன் பிறகு பரஸ்பர அங்கீகாரம் மற்றும் வலுவூட்டல் என்பவற்றின் செயன்முறைகளை அது வசதிப்படுத்துகின்றது என்பதை அடையாளக் கட்டுக்கோப்பு எமக்கு ஞாபகமூட்டுகின்றது.

உரு 2. ஆனது, மோதுகைக் கட்டுககோப்புகளுக்கிடையிலான இந்த இணைவையும், வலுவூட்டலை நோக்கிய உபாயங்களையும் எடுத்தியம்புகின்றது. நிச்சயமாக வலுவூட்டலும், அங்கீகாரமும் மோதுகை மாற்றுநிலையாக்கத்திற்கான நடவடிக்கையின் ஒரு பகுதியாகவும், வழியாகவும் இருக்கின்ற அதேவேளை மோதுகை முகாமையானது மோதுகைத் தரப்பினரின் வலுவூட்டலில் அவசியம் கவனம் செலுத்துவதில்லை.

## 3.3 அபிவிருத்தி முகவர் நிலையங்களின் தர்க்கப்பாடு

மோதுகை, சமாதானம் மற்றும் அபிவிருத்தி ஒத்துழைப்பிற்கான DAC வழிகாட்டுதல்கள், பங்கேற்பு மற்றும் வலுவூட்டல் செயல்முறைகளினை வசதிப்படுத்துவதில் அபிவிருத்தி உதவியின் பாத்திரத்தினை விரித்துரைத்துள்ளன. ஜேர்மன் தொழில் நுட்ப ஒத்துழைப்பின் (GTZ) கருத்தியல் பத்திரத்தில், மோதுகைத் தவிர்ப்புக்கும், மோதுகை முகாமைக்குமான பிரதான உபாயங்கள் அ) கட்டமைப்பு உறுதிப்பாட்டினை உருவாக்குதல் ஆ) சம்பந்தப்பட்ட குழுக்கள் மற்றும் நிறுவனங்களின் மோதுகை மாற்று-நிலையாக்கத் திறன்களை மேம்படுத்துதல் ஆகும் (GTZ 2001). குறிப்பிட்ட குழுக்களின் வலுவூட்டலைத் தூண்டுகின்ற அல்லது நிறுவனங்களுக்கான ஆற்றலை உருவாக்குகின்ற பங்கேற்புமிகு முறைவழிகளையே பிந்தியது கோருகின்றது. எனவே அபிவிருத்தியின்பால் திசைமுகப்பட்ட அவசர உதவி இடையீடுகள் பங்கேற்பு மிகு கிராம மதிப்பீடு (PRA) அல்லது சமூக ஒன்றுதிரட்டல் போன்ற பங்கேற்புமிக்க மற்றும் வலுவூட்டுகின்ற அணுகுமுறைகளில் பயிற்றப்பட்ட நிபுணர்களினாலேயே பொதுவாக நிறைவேற்றப்படல் வேண்டும். (பின் வரும் பகுதியைப் பார்க்க).

அபிவிருத்திக் கொள்கையின் சொல்லாடல் அமுல்படுத்துகையின் நடைமுறை அனுபவத்திலிருந்து வித்தியாசப்படாமல் இருந்தால், மோதுகை மாற்று நிலையாக்க உபாயத்தின் தேவைப்பாடுகளை அபிவிருத்தி உதவிகளினால் பூர்த்திசெய்யமுடியும் என்பது நிச்சயமாகத் தோன்றுகின்றது. எவ்வாறாயினும், அபிவிருத்தி முகவர்களின் தர்க்கவியல்-விசேடமாக இருதரப்பு கொடையாளர்களின் - (பிரதேச) வலுவூட்டலின் தர்க்கவியலுடன் பொருந்துவதைவிட மோதுகை முகாமையுடன் மிகவும் சிறப்பாகப் பொருந்துகின்றது என நாம் வாதிடுவோம். வரவு செலவுத்திட்ட ஒதுக்கீடு மற்றும் நிதி விநியோக அட்டவணை என்பவற்றின் அழுத்தத்தின்கீழ் கொடை முகவர்கள் முறைவழியினையும், மாற்றத்தினையும் விட விளைவின்பால் கூடுதலாகத் திசைமுகப்படவே இயற்கையாக உந்தப்படுவார்கள். எனவே, வலுவூட்டலானது பொதுவாகக் காரணமான ஒன்றாகமட்டுமே புரிந்துகொள்ளப்படும், இது செய்திட்ட முகாமையாளர்கள் மக்களுக்கு வரவு செலவுத் திட்ட ஒதுக்கீடுபோன்ற முக்கியமான பிரச்சினைகளில் அத்தியாவசியமான தீர்மானம் மேற்கொள்ளும் அதிகாரத்தை வழங்காமல் அவர்களைச் செய்திட்டங்களை அமுல்படுத்துவதில் ஒன்றிணைக்க காரணமாயிருக்கும். செய்திட்டங்களின் நடைமுறைப்படுத்தலுக்கு சமூக அல்லது சமூகங்களிற்கு இடையேயான மட்டங்களில் தடையாக இருக்கின்ற மோதுகைகள் சாத்தியமான அளவு விரைவாக அழிக்கப்படவேண்டிய தடைகளாக அல்லது தாமதிக்கவைக்கும் காரணிகளாகவும், பிரச்சினைகளாகவுமே பிரதானமாகப் பார்க்கப்படும்.

எனவே, போட்டியிடும் குழுக்களுக்கு இடையில் மோதுகை முகாமை ஊடாக ஏற்றுக்கொள்ளப்படக்கூடிய விட்டுக்கொடுப்பினைக் காண்பதற்கான எந்த முயற்சியும் அபிவிருத்தி முகவர்களின் தர்க்கவியலைப் பயன்படுத்துவதற்கான சாத்தியத்தினையே கொண்டுள்ளது. அவை கடினமான வலுவூட்டல் மற்றும் அங்கீகாரச் செயல்முறைகளின் நீண்ட-கால வசதிப்படுத்தலின் தர்க்கவியலினை இழக்கின்றன. அதில் சம்பந்தப்பட்டுள்ள குழுக்களின் பெறுமானங்கள், நியமங்கள், மற்றும் அச்சங்களினை ஆராய்கின்ற, அதாவது மோதுகையின் மூலகாரணங்களை ஆராய்வதற்கு அவை தவறிவிடுகின்றன. செய்திட்டத்தின் ஆழமான தாக்க மதிப்பீடுகள் பொதுவாகவே புறக்கணிக்கப்படுவதால், கொடை வழங்குனர்கள் செய்திட்டத்தின் நிலைபேறான தாக்கம் எனும் விடயத்துக்கு குறிப்பிட்ட வலியுறுத்தலைக் கொடுக்காது, பெரும்பாலான சந்தர்ப்பங்களில் எளிமையான நடைமுறைப்படுத்தல் பாதையையே பின்பற்றுகின்றார்கள்.

செய்திட்ட முகாமைத்துவமும், பணியாளர்களும் பிரதேச மக்களுடன் பேசி அவர்களின் கருத்துக்களைச் செவிமடுக்க நேரத்தை அதிகம் செலவழிக்காது, பிரதேசப் பிரச்சினைகளைப் பகுப்பாய்வுசெய்து அவற்றுக்கு உடனடியாக குறுகிய காலத்தீர்வுகளை உருவாக்கும் முடிவற்ற செயல்முறைகளிலேயே மூழ்கியுள்ளார்கள். கொடை முகவர்கள் பிரதேச ஆற்றல் உருவாக்கத்திற்கும், தீர்மானம் மேற்கொள்ளுதலுக்கும் தளங்களை உருவாக்குவதற்குப் பதிலாகத் தீர்வுகளைத் திணிக்கின்ற ஒரு உண்மையான அபாயமே இறுதியாக ஏற்படும்.

மிக மோசமான சம்பவங்களிலே, கொடை முகவர்கள் முக்கியமான தீர்மானம் மேற்கொள்ளும் செயல்முறைகளிலே பிரதேசக் களப்பணியாளர்களை ஒன்றிணைக்கத் தவறிவிட்டு, தமக்குள் தாமே ஒரு அதிகாரநிலையுடன் ஜனநாயகமற்ற முறையில் ஒழுங்கமைக்கத் தொடங்குவார்கள் இவ்வகையான கட்டமைப்புடன், தமது சொந்த உள்ளகச் செயல்விதிகளிலேகூட அடிப்படை ஜனநாயக விதிகளை ஒன்றிணைக்க இயலாதவர்கள் எனத் தம்மை நிரூபித்த இவர்கள் எவ்வாறு ஜனநாயகச் செயல்முறைகளையும், குழுக்களின் வலுவூட்டலையும் தூண்டுவார்கள் என்பது கேள்விக்கிடமானதே.

இப்பொழுது நாம் அபிவிருத்தி உதவியின் பொதுவான பங்கேற்புமிகு மற்றும் வலுவூட்டல் அணுகுமுறைகளின் கோட்பாட்டுரீதியிலான கருத்தியலையும், நடைமுறை அமுல்படுத்தலையும் நோக்குவோம். எனவே, மோதுகை மாற்றுநிலையாக்கத்துக்குப் பங்களிப்புச் செய்யக்கூடிய அவர்களின் ஆற்றலை எம்மால் திறனாய்வுடன் மதிப்பிட முடியும்.

## 4. பல்வேறு கருத்தாடல்களின் பின்புலத்தில் வலுவாக்கல்



அபிவிருத்தியின்பால் திசைமுகப்பட்ட நீளுரையாடலின் சூழமைவில் வலுவூட்டல் என்பது மிகச்சரியாக எதைக் கருதுகின்றது? என்ன வரைவிலக்கணங்கள் பொதுவாக பயன்பாட்டிலுள்ளன? மேலும் முக்கியமாக, வலுவூட்டல் செயல்முறைகள் எவ்வாறு வெற்றிகரமாக நடைமுறைச் செயற்பாடுகளினுள் நடவடிக்கைமயப்படுத்தப்படலாம்? அபிவிருத்தி உதவிக் கலந்துரையாடலுடன் ஒப்பிடும்போது, மோதுகை மாற்றுநிலையாக்கக் கருத்தாடலில் வலுவூட்டல் வரைவிலக்கணப்படுத்தப்படுகின்ற வழிகளை மீண்டும் ஒருதடவை நோக்குவோம்.

இணக்குவிப்பு கருத்தாடலில் உருவாக்கப்பட்டவாறான வலுவூட்டலிலிருந்து அபிவிருத்தி ஒத்துழைப்பானது சிக்கலான அரசியல் அவசர நிலைகளில் அதன் நடவடிக்கைகளை இன்னும் விரிவாக்க உதவுவதற்கு, என்ன கற்கலாம்?

*மோதுகை மாற்றுநிலையாக்கக் கருத்தாடலில்*, வன்முறைமிகு மோதுகைகளின் மூலகாரணங்கள் பூர்த்திசெய்யப்படாத மனிதத்தேவைகளில் இருந்து எழுவதாகவே பார்க்கப்படுகின்றன. அதேபோலவே, சமமற்றதும், அடக்கி ஒடுக்கப்பட்டதுமான சமூக மற்றும் அரசியல் கட்டமைப்புகள் ஒதுக்கப்பட்ட குழுமங்களின் ஆழமான அதிருப்திக்குக் காரணமாகி விடுகின்றன. எனவே, வலுவூட்டலானது முதலில் சமமற்ற அதிகாரத் தொடர்புகளிலேயே கவனம் செலுத்தவேண்டும். பெரும் சமூகநீதியினை அடைந்துகொள்ளும் நோக்கத்துடன் அவற்றினைச் சமநிலைப்படுத்துவதே வலுவூட்டலின் நோக்கமாக இருக்கவேண்டும்.

மாற்றுநிலையாக்கத்தினை ஏற்படுத்துகின்ற மோதுகை இணக்குவிப்பு நீளுரையாடலினுள் வலுவூட்டலை பராச் புஷ்ஷூம், பொல்ஜரும் (1994, ப 85-87) பின்வருமாறு வரைவிலக்கணப்படுத்துகின்றனர்:

> *ஒரு தரப்பு (1) அதன் இலக்குகள் (உள்ளார்ந்த பெறுமானங்கள், எடுத்துக்காட்டுகள், அச்சங்கள் உள்ளடங்கலாக), (2) அதன் தெரிவுகள், (3) அதன் திறன்கள், (4) அதன் வளங்கள், மற்றும் (5) அதன் தீர்மானம் மேற்கொள்ளுதல் பற்றிப்*

*புதிய விழிப்புணர்வையும், புரிந்துணர்வையும் பெற்றுக்கொள்ளுவதால் வலுவூட்டப்படுகின்றது. மேலும் அத்தரப்பு இப் புதிய நுண்ணறிவை இணக்குவிப்பிலும், பேச்சுவார்த்தையிலும் பயன்படுத்தக்கூடியதாக இருக்கும்:*

வலுவூட்டல் என்பது அனைத்துக்கும் முதலில், மேம்பட்ட நடவடிக்கைக்கான உதவி வழங்கப்பட்ட சுய-சிந்தனைச் செயல்முறையாகும். இது தற்போதைய இணக்குவிப்பின் சூழமைவிற்கு மட்டுப்படுத்தப்பட்டதல்ல ஆனால், தரப்பினர் எதிர்காலப் பேச்சுவார்த்தைகளிலும், மோதுகை முடிவுறுத்தல்களிலும் ஆக்கத்திறத்துடன் ஈடுபடுவது இயலுமை வழங்குகின்ற ஒன்றாகும். நிலைமாற்றத்தினை ஏற்படுத்துகின்ற இணக்குவிப்பில், வலுவூட்டலுக்கான பூரணப்படுத்தும் மூலகம் அங்கீகாரமாகும். இணைக்குவிப்புச் செய்யப்படாத மோதுகைகளிலே, தரப்பினர் பொதுவாகவே அடிப்படையில் சுய-பாதுகாப்பில் கவனம் செலுத்துபவர்களாக இருப்பார்கள். எனவே, அவர்கள் பாதுகாப்பினையே நோக்கமாகக் கொண்டிருப்பார்கள். இக்காரணத்தினால் தமது சொந்த நலன்களுக்கு அப்பால் பார்க்க இயலாதவர்களாகவே அவர்கள் இருப்பார்கள். தரப்பினர் இன்னொருவரின் நிலைமைக்கான மதிப்பீட்டினை உள்ளடக்குவதற்காகத் தமது கண்ணோட்டத்தினை விரிவுபடுத்தக்கூடியவர்களாக இருக்கும்போது அவர்கள் இணக்குவிப்பில் அங்கீகாரத்தினைப் பெறுகின்றனர்.

வலுவூட்டல் மற்றும் அங்கீகாரத்தின் கூட்டுத்தொடர்புத் தன்மை மீதான இந்த வலியுறுத்தலானது, எதிராளி என்ன கூறுகின்றார் என்பதற்கான முனைப்பான செவிமடுத்தலையும், கலந்துரையாடற் செயல்முறையையும் குறிக்கின்றது. எதிராளியின் நலன்கள், தேவைகள், அச்சங்கள் மற்றும் பெறுமானங்கள் என்பவற்றை அங்கீகரிப்பது ஒரு முறைவழியாகும். இம்முறைவழி அதேநேரத்தில் ஒருவரின் சொந்த நலன்கள், தேவைகள், மற்றும் பெறுமானங்களைத் தெளிவுபடுத்த உதவுவதுடன், அங்கீகாரம் ஊடாக வலுவூட்டலுக்கும் இட்டுச்செல்கின்றது. மற்றையவருக்கு, அங்கீகரிக்கப்படுவதானது தாம் மதிக்கப்படுகின்றோம் என்கின்ற பொதுவான உணர்வுக்குப் பங்களிப்புச்செய்கின்றது. இது பொதுவாக ஒரு நிலைக்கக்கூடிய விட்டுக்கொடுப்பின் முதற்படியாக இருக்கின்றது. மிகச்சரியான, அங்கீகாரத்தின் இந்த அம்சமே அபிவிருத்தியின்பால் திசைமுகப்பட்ட வலுவூட்டல் கருத்தாடலினுள் அடிக்கடி தவறுகின்ற விடயமாகும்.



*அபிவிருத்தி நோக்கிய கருத்தாடலானது* வறுமைக்கான பிரதான காரணம், அதிகாரம் மிக்கவர்களால் வறியவர்கள் அடக்கப்படுதல் அல்லது சுரண்டப்படுதல் என்றே அதன் வலுவூட்டல் அணுகுமுறைகள் தொடர்பாக கூறுகின்றது. ஒரு சமூகத்திலே அபிவிருத்தி இல்லாததற்கான காரணத்தின் முக்கியமான பகுதியை அதிகாரத் தொடர்புகள் கொண்டிருக்கவேண்டும் என்பதையே இது சுட்டுகின்றது.

வலுவூட்டல் எனும் சொற்பதம் உண்மையிலேயே 1960களின் மற்றும் 1970களின் சமூக இயக்கங்களில் இருந்து தோற்றம் பெறுகின்றது. உதாரணமாக, அமெரிக்காவின் கறுப்பு சக்தி இயக்கம் மற்றும் போலோ பிரெய்ரே (1972) யின் பணியினால் செல்வாக்குப் பெற்ற இலத்தீன் அமெரிக்காவின் விமோசன இயக்கம் என்பவற்றைக் குறிப்பிடலாம்.

1985ல் நைரோபியில் நடைபெற்ற பெண்கள் பற்றிய மூன்றாம் உலகமகாநாட்டிலேயே, பெண்களின் வலையமைப்பான DAWN, இச் சொற்பதத்தினை அபிவிருத்தியும், பெண்களின் அரசியலும் பற்றிய அவர்களின் கருத்தாடல்கலின் பொழுது அறிமுகப்படுத்தினர். (சென் சூ குறோன் 1988) வலுவூட்டல்பற்றிய டோனின் (DAWN) வரைவிலக்கணம், நிலவிவருகின்ற அபிவிருத்தி நெறி உதாரணத்தினுள்ளே அதிகாரத்திற்கும், அபிவிருத்திக்கும் இடையேயுள்ள தொடர்பினைப் பரீட்சிக்கின்றது. மேலும் அது பால்நிலை, இனம், வகுப்பு மற்றும் நாடுகள் என்பவற்றுக்கிடையே நிலவுகின்ற அதிகாரத்தொடர்பினை விமர்சிக்கின்றது. அத்துடன் அது பாகுபாட்டினையும் மற்றும் தனிப்பட்டவர்களையும், குழுமங்களையும் அடக்குதலையும் அடிப்படையாகக் கொண்ட கட்டுப்பாட்டினையும் அதிகாரத்தினையும் கடுமையாகச் சாடுகின்றது. வலுவூட்டலானது ஒரு தொலைநோக்காகவும், தனிப்பட்ட

தன்னுரிமையின் முறைவழியாகவும், நியாயமானதும் சமமானதுமான தொடர்புகளை நோக்கிய ஒரு சமூகத்தின் நிலைமாற்றமாகவுமே புரிந்துகொள்ளப்படுகின்றது.

*வலுவூட்டல் முறைவழிக் கட்டுப்பாட்டினைத் தக்கவைக்க* ஆரம்பிக்கையில், அடக்கப்பட்டவர்கள் சமூகத்தை மாற்றுவதற்கான தமது சொந்த அதிகாரத்தினை உருவாக்குவார்கள். இந்த விழிப்புணர்வு உருவாக்கத்தின் தனிப்பட்ட செயன்முறையும், அதேபோலவே அடக்கப்பட்ட குழுமங்களின் வலுவூட்டற் கூட்டுச் செயல்முறையுமே முற்று முழுவதுமான சமூக நிலைமாற்றத்திற்கு இட்டுச்செல்கின்றது.

வலுவூட்டலின் இந்த வரைவிலக்கணம் நிலவுகின்ற அதிகாரக் கட்டமைப்புகளை ஏற்கமறுத்து, பூரணமான மாற்றத்துக்கு அழைப்புவிடுப்பதால் அது புரட்சிக்கான குறிப்பிடத்தக்க ஆற்றலைத் தாங்கி நிற்கின்றது என்பது தெளிவாகும். சமூக இயக்கங்களில் தமது வேர்களைக் கொண்டுள்ள அரசசார்பற்ற நிறுவனங்கள் வலுவூட்டல் முறைவழியனை இந்தப் புரிந்துணர்வுடனேயே அபிவிருத்தியில் இயங்குவது இயற்கையானதாகும். அவர்களது பணி அடிப்படையிலேயே அரசியல் ஆகும். அது மிகவும் பலவீனமான குழுக்களில் விழிப்புணர்வினை ஏற்படுத்துவதிலும், அதேபோன்று பொதுமக்கள் போராட்டங்களிலும், அடக்கப்பட்டவர்களின் உரிமைக்கான பிரச்சாரத்திலும் கவனம் செலுத்துகின்றது.

வலுவூட்டல் எனும் பதம் இன்று அபிவிருத்தி கருத்தாடலினுள்ளே முற்றுமுழுவதுமாக ஒரு நாகரிகமான பதமாக உருவாகியுள்ளபோதிலும், இப்பொழுது அது அதிகமான இருதரப்பு மற்றும் பல்தரப்புக் கொடை வழங்குனர்களின் சொல்லாடலின் ஆக்கக்கூறாக இருக்கின்றபோதிலும், அதன் புரட்சி உள்ளடக்கம் அகற்றப்பட்டு, செய்திட்டத் தாக்கங்களின் நிலைபேறான தன்மைக்கும், செய்திட்டச் செலவினைக் குறைப்பதற்கும் எதிராக, ஒரு கருவி என்ற அமைப்பிலேயே பயன்படுத்தப்பட்டுவருகின்றது.



எவ்வாறாயினும், வலுவூட்டல் எனும் சொற்பதம் தொடர்ந்தும் தெளிவற்றதாகவே இருந்துவருகின்றது. அபிவிருத்தி உதவி வழங்கல் சூழலில் வலுவூட்டல் அணுகுமுறை உண்மையில் நடைமுறைப்படுத்தப்படுகின்ற வழிகளும், அளவுமே இன்னும் இருக்கின்ற பிரதான வினாவாகும். முதல் பார்வையிலே, வலுவூட்டலானது ஒதுக்கப்பட்ட குழுமங்களின் ஆற்றலைக் கட்டியெழுப்பும் சிலவகை முறைவழிகளினைவிடச் சற்றுக்கூடுதலான ஒன்று என்றே பொதுவாகப் புரிந்துகொள்ளப்படுவதுபோல் தோன்றுகின்றது. வலுவூட்டலினை ஒருபுறத்திலும், ஆற்றல் உருவாக்கத்தினை மறுபுறத்திலும் தெளிவாக வேறுபடுத்திப்பார்ப்பதற்கான தேவையினையே நாம் அதற்குப் பதிலாகக் குறிப்பிடுவோம்.

எமது வரைவிலக்கணத்தின்கீழ், ஆற்றல் உருவாக்கம் என்பது, தனிப்பட்டவர்களை அல்லது குழுக்களை சில நடவடிக்கைகளை மேற்கொள்ள அவர்களை இயலுமாக்குவதற்காக, அறிவினை அவர்களுக்கு வழங்குவதைக் குறிக்கின்றது. அது விழிப்புணர்வினை அதிகரித்தல், பயிற்சி மற்றும் மனித வளஅபிவிருத்தியின் ஏனைய வடிவங்கள் என்பவற்றை உள்ளடக்குகின்றது. ஆற்றல் உருவாக்கம் என்பது தேவையான, ஆனால் வலுவூட்டலுக்கு போதுமற்றதான ஒரு நிபந்தனையாகும். வலுவூட்டல் என்பது எப்பொழுதும் பிரதேச சமூக முறைமையின் சூழமைவில் நிகழுகின்றது. அது குறிப்பிட்ட சமூக-அரசியல் சூழலிலே நன்மைகள் கிட்டாத குழுமங்களின் அதிகாரம் மற்றும் ஆற்றலின் அதிகரிப்பைக் குறிக்கின்றது. எனவே வலுவூட்டல் உத்திகள் வலுவூட்டப்படவேண்டிய தனிப்பட்டவர்கள் மற்றும் குழுமங்கள் ஆகிய இரு சாராரினதும் தேவைகளைக் கருத்திற்கொள்ளவேண்டும். அதேபோன்று ஆட்சிக்கட்டமைப்பிலும், நிறுவன ஏற்பாடுகளிலும் ஆதிக்கம் செலுத்தி அதைத் தீர்மானிக்கின்ற பெரும் உபாயக்குழுமங்களையும் கருத்திற்கொள்ளவேண்டும். எனவே பலவீனமான மற்றும் நன்மைகள் கிட்டாத குழுமங்களின் செயல்திறன் மிகு வலுவூட்டல் என்பது, நன்மைகள் கிட்டாதவர்களின் ஆற்றல் உருவாக்கம் மற்றும் அடக்குமுறை விதிகள் மற்றும் நடைமுறைகளின் மறுசீரமைப்பு ஆகிய இரண்டினதும் இயற்கையான விளைவாக இருக்கும்.

இணக்குவிப்பிலும், மாற்றுப் பிணக்குத்தீர்விலும் மிகவும் பரிச்சயமான அங்கீகாரம் எனும் கருத்தியல், சமூக அபிவிருத்தியில் வலுவூட்டல் உபாயங்களின் வெற்றிக்கும் இன்றியமையாததாகும். சமூகங்களிற்கு உள்ளேயும், சமூகங்களுக்கு இடையேயுமான வள ஒதுக்கீடுகளும், பிணக்குகளின் தீர்வும் எப்பொழுதும் வெறுமனே பிரச்சினையைத்தீர்த்தல் என்பதைத்தாண்டி, சம்பந்தப்பட்ட சகலதரப்பினரும் பூரண-பயிற்சி பெற்ற பேச்சுவார்த்தைத் தரப்பினராக அங்கீகரிக்கப்படுதலை தேவைப்படுத்துகின்றது. இது செயன்முறையினை வசதிப்படுத்துவதற்காகப் பொதுவாக நடுநிலையான மற்றும் திறன்மிக்க நபர்களின் சேவைக்கு அழைப்பு விடுக்கும். வலுவூட்டல் என்பது எப்பொழுதுமே பாரியதும், சிக்கலானதுமான சமூக முறைமையினுள் புதைந்துள்ள முறைவழி என்பதை அபிவிருத்தி கருத்தாடல் மேலும் வலியுறுத்தியுள்ளது. எனவே தனிப்பட்டவர்களையோ அல்லது குழுமங்களையோ பலப்படுத்துகின்ற அதேநேரத்திலேயே உகந்த நிறுவன ஏற்பாடுகளினதும், ஆட்சிக் கட்டமைப்புக்களினதும் அபிவிருத்தியையும் ஊக்குவிக்காமல் விடுவது போதாததாகவிருக்கும்.

பின்வரும் பகுதியில் அபிவிருத்தி ஒத்துழைப்பிலே தற்போது பிரயோகிக்கப்பட்டுவரும் சில பங்கேற்பு அபிவிருத்தி அணுகுமுறைகளினை, விசேடமாகக் குறைவாக அபிவிருத்தி அடைந்த நாடுகளில் நன்மைகள் கிட்டாத குழுமங்களை வலுப்படுத்துவதற்கான அதன் ஆற்றலுடன் தொடர்புபடுத்தி நாம் மதிப்பிடுவோம். பின்பு, அர்த்தமுள்ள மோதுகை மாற்றுநிலையாக்கத்துக்குப் பங்களிப்புச் செய்வதற்கான எந்த முயற்சிக்குமான பங்கேற்பு அபிவிருத்தி அணுகுமுறைகளின் ஆற்றலையும், புறக்கட்டுப்பாடுகளையும் பரீசிலிப்பதன் மூலம் பகுதி 6 ஆனது நடைமுறைப்படுத்தலை ஆராயும்.

## 5. சமுதாய அபிவிருத்தி சூழமைவிற்குள் பங்குகொள்ளல் வலுவாக்கல் அணுகுமுறைகள்



பங்கேற்பு மற்றும் வலுவூட்டல் ஆகிய சொற்பதங்கள் இப்பொழுது பெரும்போக்கு அபிவிருத்தி ஒத்துழைப்பில் மரபுசார்ந்த பதங்களாகிவிட்டன. நடைமுறையில் சகல பெரிய இருதரப்பு மற்றும் பல்தரப்பு அபிவிருத்தி முகவர்களும் இந்தச் சொல்லாடலை ஏற்றுக்கொண்டுள்ளனர். நிச்சயமாகவே ஆபத்து என்னவென்றால், பங்கேற்பு எனும் பதம் கொடையாளர் நிதியிடலைக் கவர்வதற்காக மட்டுமே பயன்படுத்தப்படுகின்ற ஒரு கோஷமாக அல்லது அடைமொழிப்பெயராக இப்போது தரம் குறைக்கப்பட்டுவிட்டது.

எனவே நாம் பதங்களைக் கவனமாக வரையறைசெய்யவேண்டும். விசேடமாக அவை சமூக அபிவிருத்திச் சூழமைவில் எவ்வாறு சிறப்பாகப் பயன்படுத்தப்படுகின்றன என்பதைப் பார்க்கவேண்டும்.

பங்கேற்பு அணுகுமுறைகளுக்காகப் பரிந்துபேசும் முன்னணிக் கல்வியாளர்களில் ஒருவரான ரொபேட் சேம்பர்ஸ் (1995, ப 30), அபிவிருத்தி ஒத்துழைப்புச் சூழமைவில் பங்கேற்பு பயன்படுத்தப்படக்கூடிய மூன்று வழிகளினை அடையாளம் கண்டுள்ளார்:

- நடைமுறையில் எந்த முன்மொழிவினையும் அழகுபடுத்துகின்ற, பிரதானமாகக் கொடை வழங்குனர்களைத் திருப்திப் படுத்துகின்ற ஓர் ஒப்பனைக்குரிய சிட்டையாக
- தொழிலாளரை ஒன்றுதிரட்டுவதற்கும், விலையைக் குறைப்பதற்குமான ஒத்துத் தேர்ந்தெடுக்கும் நடைமுறையாக,
- பிரதேச மக்கள் தமது சொந்தச் சூழ்நிலைகளைப் பகுப்பாய்வு செய்வதற்கும், கட்டுப்பாட்டினைக் கொண்டிருப்பதற்கும், நம்பிக்கையைப் பெற்றுக்கொள்வதற்கும், மற்றும் தமது சொந்தத் தீர்மானங்களை மேற்கொள்வதற்கும் அவர்களுக்கு ஆற்றல் வழங்கும் வலுவூட்டல் முறைவழியினை விபரிப்பதற்கு.

இரண்டு வித்தியாசமான சிந்தனைப் போக்குகளுக்கு இடையே நாம் வகைவேறுபாடு காண்கின்றோம். பங்கேற்பினைச் சிலர் அடிப்படையில் செய்திட்டத்தின் நிலைபேற்றினை மேம்படுத்துவதற்கான ஒரு வழியாக அல்லது ஒரு கருவியாக நோக்குகின்றனர்.

எதிர்பார்ப்பு என்னவெனில், இலக்குக் குழுக்களின் சொந்த அபிவிருத்தி நடவடிக்கைகளில் அவர்களை ஈடுபடச் செய்வதன்மூலமும் மேலும் செய்திட்டச் செலவுக்கு அவர்களை நேரடியாகப் பங்களிப்பு வழங்கச் செய்வதன்மூலமும் உரித்தாண்மையை அவர்கள் எடுத்துக் கொள்வதுடன் அதன் மூலம் அபிவிருத்தி முறைவழிகளினை அவர்கள் தாமே நிலைக்கச் செய்வதுடன் உருவாக்கப்படும் எந்தச் சொத்துக்களையும் பரிபாலிப்பார்கள்.

தன்னளவில் பங்கேற்பு ஓர் இலக்காக இருக்கவேண்டும் என ஏனையவர்கள் வாதிடுகின்றனர். அதாவது, பங்கேற்பின் முறைவழிகள் பிரதேச மட்டத்தில் தீர்மானம் மேற்கொள்ளும் சக்தியை அதிகரிப்பதற்கு இட்டுச்செல்லவேண்டும். இங்கே பௌதிகச் செய்திட்டத்தின் விளைவன்றி, வலுவூட்டலே பங்கேற்பு அணுகுமுறைகளின் பிரதான குறிக்கோளாகின்றது.

வினைத்திறனின் அதிகரிப்புக்கும், ஆகுசெலவுகளைப் பகிர்வதற்குமான ஒரு வழியாகப் பங்கேற்பு மற்றும் தானே வலுவூட்டலை நோக்கிய ஒரு முடிவாகப் பங்கேற்பு என்னும் இந்த இரண்டுக்கும் இடையிலான வித்தியாசத்தினை கரோலின் மொசெர் (1993, ப 101) குறித்துக்காட்டுகின்றார்:

> *பங்கேற்பு ஓர் வழியாக இருக்குமிடத்தில், பொதுவாக அது விடயங்களை நிறைவேற்றுவதற்காக அணிதிரட்டும் ஒரு வடிவமாக வருகிறது. இது சில குறிப்பிட்ட குறிக்கோள்களை அடைவதற்கு, சில வேளைகளில் அமுல்படுத்தப்படும் மேலிருந்து கீழான அரசாங்கத்தின் கட்டளையாக அல்லது வளங்களின் பெரும் பங்கினைப் பெற்றுக்கொள்வதற்காக கீழிலிருந்து மேலான "தன்னார்வ" சமூக அடிப்படையிலான அணித்திரட்டலாகவோ சமமான அளவில் இருக்கமுடியும். பங்கேற்பு தானே ஒரு இலக்கு என்று அடையாளம் காணப்படும்போது, அதன் குறிக்கோளானது நிலையற்ற, அளவு வரையறைசெய்யப்பட்ட அபிவிருத்தி இலக்கல்ல, ஆனால் அது ஒரு முறைவழியாகும். அதன் விளைவு அபிவிருத்தி முறைவழியில் அதிகரித்துவரும் "அர்த்தமுள்ள" பங்கேற்பாகும்.*

438

இதிலே மிக முக்கியமான கேள்வி, எவ்வாறு அணுகுமுறை நடைமுறைக்குள் கொண்டுவரப்படலாம்? யார், என்ன நடவடிக்கைகளில், என்ன முறையில், ஏன் பங்குபற்றவேண்டும்? அவ்வாறான பங்கேற்பு, பங்கேற்பின் தீவிரத்தின் பல்வேறு மட்டங்களின் தரமிடலுக்கான பின்வரும் மாதிரிப்படிவ வரன்முறையில் காட்டப்பட்டவாறாகப் பல வடிவங்களை எடுக்கலாம். (பிரெட்டி மற்றும் ஏனையோர் 1995 லிருந்து எடுக்கப்பட்டது)

- முனைப்பற்ற பெறுநராகச் பங்குபற்றல் (நிவாரணம்).
- தகவல் வழங்குவதன் மூலமான பிரித்தெடுத்தல்சார் பங்குபற்றல் (உ-ம் : மதிப்பாய்வு)
- கலந்தாலோசனை மூலம் பங்குபற்றல், (நடைபெற்றுவரும் அல்லது திட்டமிடப்பட்ட நடவடிக்கைகள்பற்றி தகவல் வழங்கப்படல்).
- பொருள்சார் ஊக்குவிப்புகளுக்காகப் பங்குபற்றல், (ஊக்குவிப்புக்களுக்குப் பதிலாக வளங்களை வழங்குதல்).
- கருமப்படுதல்சார் பங்குபற்றல் (முன் தீர்மானிக்கப்பட்ட குறிக்கோள்களை அடைய குழுக்களை அமைத்தல்).
- ஊடாட்டமிகு பங்குபற்றல் (கூட்டு நடவடிக்கைக்காக புறநிலை ஆதரவுடன் இணைந்த பகுப்பாய்வு).
- சுய அணிதிரட்டல் (வெளியக நிறுவனங்களினின்றும் சுயாதீனமான முன்முயற்சிகள்).

சமூக அபிவிருத்திச் செய்திட்டங்கள் பொதுவாக உள்ளீடு மற்றும் செயல்முறை என்பவற்றின் நன்கு சமன் செய்யப்பட்ட இணைவு ஊடாக வலுவூட்டலினை அடைந்துகொள்ளவே நாடுகின்றன. ஒரு புறத்திலே, கருத்திட்டமானது பிரதேச கூட்டுநடவடிக்கைகளுக்காக ஊக்குவிப்புகளையும், பொருட்களையும் மற்றும் நிதியினையும் வழங்குகின்றது. மறுபுறத்திலே, பணியாளர்களின் ஆற்றல் உருவாக்கம் மூலமாக உள்;ர் நிறுவனங்களும், அமைப்புக்களும் வலுப்படுத்தப்படுகின்றன. நடைமுறையில், சமூக அபிவிருத்தியில் வலுவூட்டலானது, கொடையாளர் நிதியிடப்பட்ட கிராமியச் செய்திட்டங்களினைத் திட்டமிடுவதிலும், அமுல்படுத்துவதிலும் இலக்குக் குழுக்களின் முனைப்பான பங்குபற்றலினையும் பெறுவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

இணைந்த திட்டமிடல் மற்றும் தீர்மானம் மேற்கொள்ளலினை வசதிப்படுத்துதல் மற்றும் செய்திட்ட அமுல்படுத்துகையின் உள்;ர் முகாமைத்துவம் ஆகியன சமூகக்கற்றலுக்கான ஒரு முறைவழியினைத் தூண்டுவதையும் நோக்கமாகக் கொண்டுள்ளன. சமூக அபிவிருத்தியானது இந்த முயற்சியிலே பலவிதமான சாதனங்களைப் பயன்படுத்துகின்றது. *குறிப்பிடத்தக்கதான இரண்டினை நாம் காண்கின்றோம். பங்கேற்புடனான கிராமிய மதிப்பீடு (PRA) (பார்க்க பெட்டி 2).* மற்றும் சமூக அணிதிரட்டல் (பார்க்க பெட்டி 3) இரண்டுமே தென்னாசியச் சூழலமைவில் பிரசாரம் செய்யப்பட்டுள்ளதுடன், ஒரு பகுதி ஒத்துழைப்புமிக்கதாகவும், மறு பகுதி ஒருவா் மற்றவர் மீது பகைமையுணர்வுகொண்டதாகவும் பார்க்கப்படுகின்றது.

சமூக அணிதிரட்டல் அணுகுமுறைக்காகப் பரிந்து பேசுபவா்கள் பொதுவாக PRA அணுகுமுறையினை அது சமூகப் பொறியியல் என்றும், அது நீண்டகால முறைவழிகளை விடவும் கருவிகளின்மீதே கவனம் செலுத்துகின்றது என்றும் கூறி அதனைக் கேள்விக்குட்படுத்துகின்றனா். நலன்கள் கிட்டாத குழுவினரை உண்மையாக வலுவூட்டுவது நீண்ட தவணையிலான அணுகுமுறையினைத் தேவைப்படுத்துகின்றது. அதாவது, ஒரு வார கிராமியச் செயலமா்வுகளுக்கு அப்பால் செல்பவை. மறுபுறத்திலே, PRA கிராமியச் செயலமா்வுகள், பேச்சுவார்த்தைகள், பேரம் பேசுதல், கலந்துரையாடல் மற்றும் மோதுகைத் தீா்வு போன்றவை சம்பந்தப்படுகின்ற ஒரு நீண்ட தவணையிலான ஈடுபாட்டு முறைவழியில் ஒரு சிறிய படியாக மட்டுமே இருக்க முடியும் என PRA அறிஞா்கள் வலியுறுத்துகின்றனா். (ஷா & ஷா 1995). இது தேவையான ஒன்றுதான் எனினும் இலகுவில் பலியாகக்கூடிய குழுமங்களை வலுவூட்டப் போதுமான சாதனமல்ல. 439

**பெட்டி 2 : பங்கேற்புடனான கிராமிய மதிப்பீடு (PRA)**

பங்கேற்புடனான கிராமிய மதிப்பீடு எனும் பதமானது மக்கள் அவா்களின் வாழ்க்கையினதும், நிலைகளினதும் யதார்த்தத்தினை வெளிப்படுத்தவும், பகுப்பாய்வு செய்யவும் என்ன நடவடிக்கை எடுப்பது என அவா்கள் தாமே திட்டமிடுவதற்கும், மற்றும் பெறுபேறுகளைக் கண்காணிக்கவும், மதிப்பிடவும் அவா்களை இயலுமாக்குவதற்கான அணுகுமுறைகளின் வலையமைப்பு முறைகள், மற்றும் நடத்தை என்பவற்றைப் பொதுவாகக் குறிக்கின்றது. இந்தப் பதமானது குழப்பம் ஏற்படுத்துகின்றதாகவும், பங்கேற்புடனான கற்றல் மற்றும் நடவடிக்கை (PLA) பங்கேற்புடனான தேவைகள் கணிப்பீடு (PNA) போன்ற பல்வேறுவிதமான ஒருபொருட் பன்மொழிகளின் கீழ் பயன்படுத்தப்படுகின்றது. PRA யின் பிரதான மூலகங்கள் அது பயன்படுத்தப்படுகின்ற முறைகளும், அதை வசதிப்படுத்துவோரின் நடத்தையும், மனப்பாங்குமாகும்.

**முறைகள்**

தகவல்களை வெளிப்படுத்தவும், பகிரவும் மக்களுக்கு ஆற்றல் வழங்குவதற்கும், மேலும் கலந்துரையாடலையும், பகுப்பாய்வினையும் தூண்டுவதற்கும் PRA கருவிகளின்

சேர்மானத்தினைப் பயன்படுத்துவது கிராமிய வாழ்க்கையின் சிக்கல்தன்மையினையும், பல்வகைத் தன்மையினையும் பற்றிய மிகவும் பூரணமான ஒருகாட்சி உருவாக்கத்தினை இயலுமான தாக்குகின்றது.பொதுவான கருவிகள் பின்வருவனவாகும்:

- படம் வரைதல்
- பிரவாக உருவரைபுகள்
- பருவகாலப் பட்டியல்கள்
- வார்ப்புருக்கள் மற்றும் கோடுகளின் வலைப்பின்னல்கள்
- கிராமங்களை ஊடறுக்கும் பாதயாத்திரை

கருவிகள் குழுக் கலந்துரையாடல்களின்போதும், பகுதி கட்டமைப்புச்செய்யப்பட்ட நேர்காணல்களின்போதும் பிரயோகிக்கப்படுகின்றன.

**இலகுபடுத்தல் :**

இலகுபடுத்துநர்கள் உள்;ர் மக்களுக்கு உதவுகின்றனர். அவர்கள் பகுப்பாய்வு செய்வதற்கும், விசாரணை செய்வதற்கும், இறுதியாக அவர்களாகவே திட்டமிடுவதற்கும் உதவுகின்றனர். தகவல் கிராமத்தவர்களுக்கும், புறத்தார்களுக்கும் இடையிலும் (திட்டமிடுபவர்கள், களப்பணியாளர்கள்), கிராமத்தவர்களுக்கு மத்தியிலும் பகிரப்படுகின்றது. PRA பொதுவாகக் கிராமியச் செயலமர்வு வடிவில் நிறைவேற்றப்படுகின்றது. புறநிலை வசதிப்படுத்துநர்கள் கிராமத்தவர்களுடன் இணைந்து கூட்டாக PRA யை நிறைவேற்றுவதற்காக சில நாட்கள் அவர்களுடன் இணைகின்றனர்.



**நடத்தையும், மனப்பாங்கும்**

மனப்பாங்கில் மாற்றமும், வெளியக இலகுபடுத்துநர்களினதும், செய்திட்டத் திட்டவியலாளர்களினதும் பாத்திரங்கள் முறைகளைவிட முக்கியமானவையாகும். புறத்தாரிடமிருந்து, அகத்தாருக்குத் "தடியினைக் கையளிப்பது" பற்றி அரங்குகளில் பேசப்படுகின்றது, அதாவது: கிராமத்தவர்கள் அவர்களாகவே. PRA வசதிப்படுத்துநர்கள் முறைவழியினில் ஆதிக்கம் செலுத்தாமல், கூட்டங்களைக் கூட்டுபவர்களாகவும், ஊக்கிகளாகவும் செயற்படவேண்டும். அவர்கள் மரியாதையினைக் காட்டவேண்டும்.நேரம் எடுக்கவேண்டும், வெளிப்படையாக இருக்கவேண்டும். அத்துடன் சுய விமர்சகராக இருக்க வேண்டும். உள்ளூர் மக்கள் அவர்களின் சொந்தப் பகுப்பாய்வினை நிறைவேற்றும் ஆற்றல் மிக்கவர்கள் எனும் நம்பிக்கையை வசதிப்படுத்துநர்கள் பெறவேண்டும்.

(மூலங்கள் : அபிவிருத்திக் கற்கைகளுக்கான நிறுவனம் 1995, பேரவைகள்1994 அ,1995, பேரவைகள்ரூகுய்ஜிட் 1995)

பங்கேற்புடனான கிராமிய மதிப்பீடு ஓர் அபிவிருத்தித் திட்டமிடலின் தத்துவமாக அல்லது குடும்ப அணுகுமுறையாகவே சிறப்பாகப்புரிந்துகொள்ளப்படுகின்றது. அது மக்கள் அவர்களின் வாழ்க்கையினதும், நிலைகளினதும் யதார்த்தத்தினை வெளிப்படுத்தவும், பகுப்பாய்வு செய்யவும் மற்றும் என்ன நடவடிக்கை எடுப்பது என்பதை அவர்களாகவே திட்டமிடவும், பின்பு கண்காணித்துப் பெறுபேறுகளை மதிப்பிடவும் அவர்களை இயலுமானதாக்குகின்றது. வழமையாகவே ஒரு குறிப்பிடப்பட்ட பிரதேசத்திலுள்ள அபிவிருத்திப் பிரச்சினைகளையும் மற்றும் அடிப்படைத்தேவைகளையும் அடையாளம் காண்பதும், அதைத் தொடர்ந்ததான செய்திட்டத் திட்டமிடலும் ஒரு குறிப்பிட்ட அமைவிடத்தில் இடம்பெறும் செயலமர்வுடன் ஆரம்பமாகும். அந்த நடவடிக்கையிலே பல உறுப்பினர்களைக்கொண்ட ஒரு PRA

குழுவும், நடுவர்களும், பிரவாக உருவரைபு மற்றும் கிராமத்தை ஊடறுக்கும் பாதயாத்திரை போன்ற பல்வேறுவிதமான கருவிகளைப் பயன்படுத்திக் கிராமிய வாழ்க்கையின் சிக்கல்தன்மையினையும், பல்வகையினையும்பற்றிய ஒரு பூரண தோற்றப்பாட்டை உருவாக்குவதற்காக கூட்டுப்பகுப்பாய்வு மற்றும் கற்றலுக்கான முறைவழியினை இலகுபடுத்துவர்.

பிரதேச மக்கள் அவ்வாறான முறைவழியின் உரித்தாண்மையினை எப்போதும் எடுத்துக்கொள்ளவேண்டும். அவர்களின் சொந்த யதார்த்தத்தினைப் பகுப்பாய்வுசெய்யவேண்டும். மற்றும் அவர்களின் சொந்த முன்னுரிமைக் கருத்திட்டங்களினைத் திட்டமிடல் வேண்டும். எனவே இவ்வாறான அனைத்துப் பொருத்தமான சமூகக் குழுக்களையும் (பெண்கள், இளைஞர் யுவதிகள், கிராமத் தலைவர்கள்) விசேடமாக ஒதுக்கப்பட்டவர்களை அல்லது புறக்கணிக்கப்பட்டவர்களை ஈடுபடுத்துவதற்கு PRA சகல முயற்சிகளையும் எப்போதும் மேற்கொள்ளும். PRAயின் பெறுபேறு, முன்னுரிமைச் செய்திட்டங்களின் பட்டியலுடனான விரிவான அபிவிருத்தித்திட்டம் மட்டுமல்ல, கூடவே இணைந்த கற்றலின் முறைவழியும் ஆகும். அதுவே பிரதேச மக்கள் தமது சொந்தக் கிராமத்தின் / சுற்றாடலின் அபிவிருத்திக்கான பொறுப்பினை ஏற்றுக்கொள்வதற்காக அவர்களுக்கு நிச்சயமாக இயலுமையை வழங்கும்.

இவ்வகையாகப் புரிந்துகொள்ளும்போது PRA உண்மையிலேயே பிரதேசமட்டத்தில் வலுவூட்டல் முறைவழியினைத் தூண்டுவதற்கான சிறப்பானதும், பொருத்தமானதுமான வழியாகத் தென்படுகின்றது. எவ்வாறாயினும், யதார்த்தத்திலே PRA கருவிகள் கிராமத்திலே கிராமமக்கள் முனைப்பாக ஈடுபடுகின்றதும், அதன் பின்தொடரலுக்கான தீர்மானம் மேற்கொள்ளும் அதிகாரம் வழங்கப்படுகின்றதுமான எவ்விதமான முறைவழிகளினதும் தூண்டல்மீது அதிக முக்கியத்துவம் வழங்காது, தகவல் சேகரிக்கும் முயற்சிக்கு மட்டுமே பயன்படுத்தப்படுகின்றது.

பொதுவாக, ஆராய்ச்சியாளர்கள் PRA கருவிகளைக் தேர்ந்தெடுத்து கிராமத்தவர்களுக்கு எப் பெறுபேறுகளினைப் பற்றியும் பின்னூட்டல்செய்யாது, பிரதேச மட்டத்திலிருந்து தரவுகளையும், தகவல்களையும் சேகரிப்பதற்கு மட்டுமே அதைப் பயன்படுத்துகின்றனர். எனவே, பல கிராமப் பிரதேசங்களில், பிரதேசவாசிகள் தமது கிராமத்தினுள் PRA குழு நுழைவதைக் கண்டமாத்திரத்திலேயே சந்தேகம் கொள்ள ஆரம்பிப்பது ஒன்றும் ஆச்சரியத்திற்குரியதல்ல. கிராமத்தவர்கள் தமக்கு எவ்விதமான தெளிவான நன்மைகளும் மீளக்கிடைக்காத பட்சத்திலே, கருவிகளுடன் மேலும் சிறிதளவு நேரத்தையும் செலவிடத் தயாரில்லை என்பதே யதார்த்தமாகும்(கோர்ப் 2000).



இந்தச் சொற்பதமானது பிரதேச அமைப்புச்சார்ந்த ஆற்றல்களையும், மனிதவளங்களையும், குடிசார் நிறுவனங்களையும் பலப்படுத்துவதை அர்த்தப்படுத்தவும் பயன்படுத்தப்படுகின்றது. அது, பதிலாக, மோதுகையிடினால் பாதிக்கப்பட்ட சமூகங்களின் ஈடுகொடுக்கும் பொறிமுறையினைப் பலப்படுத்தி பங்கேற்புடனான அபிவிருத்தியை நோக்கிய வழியில் முன்னேறுகின்றது-(சச்சிதானந்தம் 1996, ப 867)

ஒரு சமூக அணிதிரட்டலாளர் ஓர் அரசசார்பற்ற நிறுவனத்தினால் வேலைக்கமர்த்தப்பட்டவராகவோ அல்லது தெரிவுசெய்யப்பட்ட கிராமப்பிரதிநிதியாகவோ இருக்கலாம். அவர் கூட்டு நடவடிக்கைகளுக்கான குழு உருவாக்கத்துக்கு தூண்டுதலளிக்கும் ஒரு இலகுபடுத்துநராக (ஊக்கி) செயற்படுகின்றார். தெற்காசியச் சூழமைவிலே, சமூக அணிதிரட்டல் என்பது பெருமளவுக்கு இப்பொழுது பிரபல்யம் அடைந்துள்ளது. இப்பொழுது அது அரச நிறுவனங்களினாலும், இருதரப்புக் கொடை வழங்குனர்களினாலும், அதேபோன்று அரசசார்பற்ற நிறுவனங்களினாலும் பரவலாகப் பயன்படுத்தப்பட்டுவருகின்றது. அதன் பல்வேறு பயன்பாட்டாளர்களாலும் அது பல்வேறுவிதமாகப் புரிந்துகொள்ளப்பட்டுள்ளது. ஆனால், பொதுவாக அதன் பிரயோகமானது அரசியல் கலப்பற்றதாகவும், நடைமுறைப்படுத்தக்கூடியதாகவும் இருக்கின்றது. விழிப்புணர்வு உருவாக்கத்திலும், சுய ஒழுங்கமைப்பிலும் அதிகமான நேரத்தினைச் செலவிடாமல், செய்திட்டங்களினை மிகவும் செயற்திறனுடன் அமுல்படுத்தும் அடிப்படைநோக்கத்திலேயே குழு உருவாக்கத்துக்காக மக்கள் அணிதிரளுகின்றனர்.

**பெட்டி 3. சமூக அணிதிரட்டல்**

சமூக அணிதிரட்டல் என்பது பலவீனமான குழுக்களை வலுப்படுத்துவதற்கான ஒரு செயல்முறையாகும். (உ-ம் வறியோர், பெண்கள், இளைஞர்-யுவதிகள், தாழ்த்தப்பட்ட சாதியினர், இனக்குழுமங்கள், யுத்தத்தினால் பாதிக்கப்பட்டவர்கள், அகதிகள் இன்னும் பிற) அத்துடன் அது ஒடுக்கப்பட்ட மற்றும் வறிய மக்களின் சமூக மற்றும் பொருளாதார நிலைகளை முன்னேற்றுவதற்காக,

* விழிப்புணர்வு உருவாக்கம்
* சுய ஒழுங்கமைப்பு மற்றும்
* செயல்

என்பவற்றினை இணைக்கின்றது. மக்கள் சிறுகுழுக்களை உருவாக்குகின்றார்கள். மேலும் அவர்களின் ஆற்றல்பற்றியும், அவர்களுக்குக் கிடைக்கக்கூடிய வளங்கள்பற்றியும் அவர்கள் அறிவூட்டப்படுகின்றார்கள். உ-ம் நடைமுறையிலுள்ள அரச, அரசசார்ப்பற்ற மற்றும் தனியார் சேவைகள். எனவே சமூக அணிதிரட்டல் என்பது இரண்டு பரிமாணங்களைச் சுட்டுகின்றது.

* பலவீனமான குழுக்களின் தனிப்பட்ட, உளவியல், சுய-புலனுணர்வினை மாற்றுதல்
* விலக்கல் மற்றும் ஓரங்கட்டப்படல் ஆகியவற்றின் முழுத் தாக்கங்களிலிருந்தும் சமூக மற்றும் பொருளாதார நிலைகளை மாற்றுதல்.



**சமூக அணிதிரட்டல் என்பது ஒரு நீண்டகால முறைவழியாகும் :**

தெற்கிலுள்ள பல அரசசார்பற்ற நிறுவனங்கள் அவர்களின் கிராமத்தில் அல்லது சொந்தப் பிரதேசத்தில் வாழும் பயிற்றப்பட்ட கிராமத் தொண்டர்களைப் பயன்படுத்துவதன்மூலம் (மாற்ற முகவர்கள், அல்லது சமூக அணிதிரட்டலாளர்கள்) வலுவூட்டலை மேம்படுத்துகின்றனர். ஏனைய நிறுவனங்கள் சமூக அணிதிரட்டலாளர்களாகப் பணியாற்றுகின்ற பயிற்றப்பட்ட பணியாளர்களைக் கொண்டிருக்கின்றன. இத்தொண்டர்கள் அல்லது சமூக அணிதிரட்டலாளர்கள் வறிய கிராம மக்களை மேலதிக அபிவிருத்திக்கான அடிப்படைக் கருவாக சேமிப்புக் குழுக்களையும், கடன் குழுக்களையும் அமைக்கத் தூண்டுகின்றனர். சமூக அணிதிரட்டலானது குழு அடிப்படையிலான அணுகுமுறையிலேயே கவனம் குவிக்கின்றது. காலம் செல்ல, சிறு குழுக்கள் முறையான கட்டமைப்புக்களுடனான பெரிய குழுக்களாக விருத்தியடைகின்றன. (சமூக அடிப்படையிலான அமைப்புக்கள்-CBOs) இதன்மூலம் கூட்டுநடவடிக்கைக்கும் மற்றும் சேவை வழங்குநர்களுடன் (அரச திணைக்களங்கள், அ.சா.நிறுவனங்கள், தனிப்பட்ட வியாபாரங்கள்) பேரம்பேசுதலுக்குமான பிரதேச சுய-உதவி ஆற்றல்கள் உறுதியடைகின்றன.

**சமூக அணிதிரட்டல் உணர்வுநிலையை அதிகரிப்பதன்மூலம் பணியாற்றுகின்றது.**

வறிய மக்கள் ஏன் அவர்கள் வறியவர்களாக இருக்கின்றார்கள் மற்றும் என்ன நிலைகள் அவர்களின் வறுமைக்குக் காரணமாக இருக்கின்றன என்பதைப் பகுப்பாய்வு செய்யவும், அதன்பின் அந்த வறுமையின் பிடியிலிருந்து அவர்களின் சொந்த முயற்சியினால் வெளியேறுவதற்கான சாத்தியமிகு தீர்வுகளை அடையாளம் காணவும் இயலுமை ஏற்படும் ஒரு நிலைக்கு அவர்கள் கொண்டு வரப்படுகின்றனர்..

நீடித்த மோதுகைகளிலே மோதுகை மாற்றுநிலையாக்கத்தின் கருத்தாடலில், சிறுபான்மையினருக்கான மனித உரிமைகள் என்று வரும்போது, சமூக அணிதிரட்டல் வேறு ஒரு பரிமாணத்தை அறிமுகப்படுத்துகின்றது. ஓரங்கட்டப்பட்ட குழுக்கள் (உ-ம் இனக்குழுமங்கள், பெண்கள், தாழ்த்தப்பட்ட சாதியினர்) அங்கீகாரத்திற்கும், அவர்களின் அடையாளத்தை விருத்தி செய்வதற்கும் அவர்களுக்கு இருக்கின்ற உரிமைகள் பற்றி விழிப்பூட்டப்படுகின்றார்கள். இதன் மூலம் அரசியல் முறைவழியிலே அவர்கள் முனைப்பாகப் பங்குபற்றுகின்றனர்.

அபிவிருத்தி உதவியின் சூழமைவானது அதிகமான சந்தர்ப்பங்களில் PRA மற்றும் சமூக அணிதிரட்டல் ஆகிய இரண்டு அணுகுமுறைகளினையும் பயன்படுத்துகின்றது. இங்கே சமூக அணிதிரட்டல் என்பது, மக்களை அவர்களின் கிராமத்திலே நடைபெறும் அபிவிருத்திச்செயல்முறைகளின் திட்டமிடலிலும் மற்றும் அமுல்படுத்துவதிலும் ஈடுபடவைப்பதற்கான பொதுவான செய்திட்ட அணுகுமுறையாகவும் மற்றும் அச்செயல்முறைகளுக்கான உரித்தாண்மையை அவர்கள் ஊகிப்பதாகவுமே புரிந்துகொள்ளப்படுகின்றது. இதிலே பகுப்பாய்வுக்கும், செய்திட்டத்தினை அடையாளம் காண்பதற்கும் PRA கருவிகள் பயன்படுத்தப்படுகின்றன. சமூக அணிதிரட்டலாளராகப் பொதுவாக இருக்கின்ற செய்திட்டப் பணியாளர்கள், முன்னுரிமைச் செய்திட்டங்களினை அடையாளம் காண்பதற்காகவும், குறிப்பிட்ட பலவீனமான குழுக்கள் கவனம் செலுத்தி அக்குழுவிலுள்ளவர்கள் தமது கடமைகளைச் செவ்வனே நிறைவேற்றுவதற்காக அதன் தலைவர்களுக்கு தலைமைத்துவ அல்லது முகாமைத்துவத் திறன்களில் பயிற்சி வழங்குவதற்காக அவர்களை அடையாளம் காண்பதற்காகவும் குழுக் கலந்துரையாடலை இலகுபடுத்துகின்றனர்.



வகுத்தமைத்த குறிக்கோள் மக்களை வலுவூட்டுவதாகவே இன்னும் இருக்கின்றது. இந்தக் குறிக்கோளின் நடைமுறை அமுல்படுத்துகையிலுள்ள கஷ்டம் என்னவென்றால், மிக அதிகமான சந்தர்ப்பங்களில், சமூக அணிதிரட்டலாளர்கள், இலக்குக் குழுக்களுக்கு உரித்தாண்மையை விட்டுவிட்டு அவர்களின் முயற்சிகளிலே அவர்களுக்கு உதவிசெய்வதற்குப் பதிலாக, தாமாகவே ஒழுங்கமைத்துக்கொள்வதனால் களத்திலே நாயகர்களாக ஆகிவிடுகின்றனர்.

இது செய்திட்டத்தின் பெறுபேற்றினை முன்னேற்றுவதில் மிகவும் வினைத்திறனாக இருக்கக்கூடிய அதேவேளை, பிரதேச வலுவூட்டலின் எந்தவொரு அர்த்தமுள்ள பெரிய முறைவழியினையும் பலவீனப்படுத்தும் என்பதையும் நாம் உணரவேண்டும். மேலே ஆராய்ந்தவாறு, முறைவழியின்பால் திசைமுகப்பட்டிருப்பதனைவிட, வலுவான விளைவின்பால் திசைமுகப்பட்டிருக்கக்கூடியதான இந்தப் பக்கச்சார்புக்குரிய காரணங்களினை அபிவிருத்தி முகவர்களின் முகாமைத்துவ முறைமையாற்றலில் அடிப்படையாகக் காணக்கூடியதாகவிருக்கின்றது. அவை சிலவேளைகளில் செய்திட்டச் சூழமைவினுள்ளே எதிர்நோக்கப்பட்ட குறிப்பிட்ட சிரமங்களின் பெறுபேறாகவும் இருந்தாலுங்கூட இதுவே உண்மையாகவுள்ளது.

* செய்திட்டங்கள் இறுக்கமான காலக்கெடுவினுள் நிறைவேற்றப்படுவதையும், குறுகிய காலத்தினுள் புலப்படத்தக்கதும், அளக்கக்கூடியதுமான பெறுபேறுகளைச் சமர்ப்பிப்பதையும், கடுமையான நிதிச் செலவழிப்புக்கான திட்டங்கள் தேவைப்படுத்துகின்றன. இவ்வாறான நேர அழுத்தங்கள் பிரதேச-மட்டத்திலே சுய-உதவி முறைவழியினை ஊக்குவிப்பதற்கான எந்த முயற்சிக்கும் எதிர்மறையான பெறுபேற்றினைக் கொடுக்கக்கூடியதாக இருக்கும். வலுவூட்டல் முறைவழியின் தாக்கத்தினை அளவுசார் முறைகளில் அளப்பது கடினமானதாகும். ஒரு செய்திட்டம் அதன் வெற்றியை இப் பரிமாணத்தினூடே விளக்கிக்காட்டவேண்டும் அல்லது நிரூபிக்கவேண்டும் என எவ்வாறு நாம் நியாயமாக எதிர்பார்க்கமுடியும்?

* ஒரு சமூகத்தினுள்ளே வலுவூட்டலினதும், சமூகக்கற்றலினதும் முறைவழிகளினை முன்னெடுப்பதற்கு உயர்வாக விருத்தியடைந்த வசதிப்படுத்தல், தொடர்பாடல் மற்றும் பேச்சுவார்த்தைத்திறன்கள் தேவைப்படுகின்றன. பல அபிவிருத்தி முகவர்கள் பொருத்தமான அறிவும், மற்றும் பிரதேச முன்னெடுப்புக்களை ஊக்குவிக்க உகந்ததான மனப்பாங்கும், நடத்தையும் கொண்ட ஆளணியினரை நியமிப்பதில் பெரும் சிரமங்களை எதிர்கொள்கின்றனர்.

* அபிவிருத்தி முகவர்கள் பங்கேற்புடனான மதிப்பீடுகளுக்குப் பொதுவாக அதிக முயற்சிகளை எடுக்கின்றனர். (குறிப்பாக, PRA முறைகளைப் பயன்படுத்தல்) ஆனால், அதன் பிறகு என்ன நடக்கவேண்டும் என்பது பற்றி அவர்கள் தெளிவற்றவர்களாக இருக்கின்றனர். செய்திட்டங்களினை நடைமுறைப்படுத்துதல் என்று வரும்போது அவர்கள் நிர்வாக மற்றும் ஆற்றல் மட்டுப்படுத்தல்களுக்கு முகம் கொடுக்கின்றனர். மேலும் அதிகமான சந்தர்ப்பங்களில் சமூகங்களில் அவர்கள் ஆரம்பித்த முறைவழிகளை அவர்களால் பின்தொடர முடியாமல் இருக்கின்றது. பல நாடுகளில், கிராமமக்கள் தாம் முகவர்களால் மிகைமதிப்பிடப்பட்டதாக உணர்கின்றனர். அதன் பிறகு சொற்ப நடவடிக்கைகளே உண்மையில் அமுல்படுத்தப்படுகையில் அவர்கள் ஏமாற்றத்திற்குள்ளாகின்றனர், தீவிர மதிப்பீட்டு முறைவழிகளின்போது காணப்பட்ட ஆரம்ப ஆர்வம், பின்பு இலகுவாக வெறுப்பு நிலைக்கு மோசமடைந்து செல்லலாம்: இது உண்மையான வலுவூட்டலுக்கான எந்த ஒரு முயற்சிக்கும் தெளிவாகவே தீங்குபயக்கக்கூடியதாகும்.



**பெட்டி 4: செய்திட்ட உதாரணம்-ஜேர்மன் அபிவிருத்திக் கூட்டுறவமைப்பின் (GTZ) ஒன்றிணைந்த உணவுப்பாதுகாப்பு நிகழ்ச்சித்திட்டம், திருகோணமலை (IFSP)**

ஒன்றிணைந்த உணவுப் பாதுகாப்பு நிகழ்ச்சித் திட்டம்- திருகோணமலை (IFSP) இப்பொழுது இலங்கையின் கிழக்குப்பகுதியில் பணியாற்றி வருவதுடன், அது ஒரு இரட்டைச் செய்திட்ட இடையீட்டு உபாயத்தினையும் பின்பற்றி வருகின்றது. சமூகச் செய்திட்டங்கள் முழுச்சமூகத்துக்கும் பயன்தரக்கூடிய சொத்துக்களை உருவாக்குகின்ற அதேவேளை (பலவீனமானவர்களை விட மத்திய வகுப்பாருக்கும் மேட்டுக் குடியினருக்குமே அதிகம் நலன் அளிக்கின்றன). செய்திட்டமானது இப் பலவீனமானவர்களுக்காக மட்டுமென உருவாக்கப்பட்ட வறுமைச் செய்திட்டங்களையும் அமுல்படுத்திவருகின்றது (பவெர் மற்றும் ஏனையோர்1999). எனவே செய்திட்டமானது தலைவர்களுக்கு சிலவற்றை வழங்குகின்ற அதேவேளை, சமூகத்தினுள்ளிருக்கும் மிகவும் வறிய அல்லது எவ்வித நலன்களும் கிட்டாத குடும்பங்கள் அல்லது தனிப்பட்டவர்களுக்கான குறிப்பிட்ட ஆதரவுக்கான நம்பிக்கைமிகு தளத்தையும் உருவாக்குகின்றது.

பலவீனமான குழுக்களை அடையாளம் காண்பதற்கு கிராமத் தலைவர்களையும், முழுச் சமூகத்தையும் ஈடுபடுத்தி, இயலுமான அளவுக்கு வெளிப்படையான தன்மையினைப் பேணச் செய்திட்டம் முயற்சிக்கின்றது. யாராவது தவிர்க்க முடியாது விடுபடுவார்கள் என்பதையே எப்போதும் தெரிவு என்பது சுட்டுவதால், இது மிகவும் சிக்கலான ஒரு பணியாகும். முழு முறைவழியிலும் கிராமத் தலைவர்களை ஈடுபடுத்தி அத்துடன் வறிய மக்களுக்கான அவர்களின் சமூகப்பொறுப்புணர்வினைத் தட்டி எழுப்புவதே செய்திட்டத்தின் உபாயமாகும். எனவே செய்திட்டமானது கிராமத்திலே உள்ள மேல்மட்ட மக்களினால் ஆதிக்கம் செலுத்தப்படுகின்ற சமூக அடிப்படையிலான

நிறுவனங்களுடன் ஒருபுறத்திலும், மறுபுறத்திலே, பலவீனமானவர்கள் நன்கு பிரதிநிதித்துவம் செய்யப்படுகின்ற முறைசாரா நடவடிக்கைக் குழுக்களுடனும் ஒத்துழைக்கின்றது.

குடும்பங்களிலே ஆண்களின் ஆதிக்கப்பரப்பின்கீழ் இதுவரை காலமும் வருமானம் பிறப்பிப்பதற்காக இருந்துவந்த நடவடிக்கைகளையும், செய்திட்டங்களினையும் பெண்கள் குழுவை மேற்கொள்ளுமாறு செய்திட்ட இடையீடுகள் ஊக்குவிக்கும்போது, அங்கே குடும்ப மட்டங்களிலே பிரச்சினை உருவாகலாம்.

செய்திட்ட இடையீடுகள் கிராமத்தவர்களுக்கும் மற்றும் அருகிலுள்ள அகதிமுகாம்களில் வசிப்பவர்களுக்கும் இடையில் எழக்கூடிய மோதுகைகள்போன்ற குறிப்பிட்ட பாதுகாப்பு அல்லது யுத்த நிலைமைகளில் வேர் கொண்ட சமூக அடிப்படையிலான மோதுகைகளினையும் பொதுவாகக் கையாளவேண்டும். ஆரம்பத்தில் சமூக மோதுகைகள் பொதுவாக வன்முறை சாராதவையாகவே இருக்கும். ஆனால் எப்போதும் அவை வன்முறை அதிகரிப்புக்கான சக்தியினைக்கொண்டிருக்கும். எனவே கருத்திட்டங்க்ள, வன்முறையற்ற மோதுகை முகாமையை ஏற்படுத்துவதற்கான பேச்சுவார்த்தை, ஒத்துழைப்புமிகு தொடர்பு மற்றும் வழிமுறை அமைப்பு என்பவற்றுக்கான தளங்களை உருவாக்கக்கூடிய நிலைகளை வசதிப்படுத்தவேண்டும். மற்றும் அவற்றினை செயற்திறனுடன் கவனத்திற்கொள்ளவேண்டும். பெரும்பாலான சந்தர்ப்பங்களில் இம் மோதுகைகள் வளங்கள் தொடர்பாக ஏற்பட்ட சிறிய இணக்கப்பாடின்மையாகவே புலனுணரப்படுகின்றது. அதேவேளை அடையாளம் மற்றும் அங்கீகாரம் என்பவற்றின் முக்கியமான அம்சங்கள் பொதுவாகப் புறக்கணிக்கப்படுகின்றன.

ஆனால் சிக்கலான, அவசரநிலைகளினுள் வலுவூட்டல் முறைவழியினை வசதிப்படுத்துவதில் கொடை வழங்குநர்கள் என்ன நடவடிக்கைகளின் நோக்கெல்லைகளையும், முயற்சிக்கான தளங்களையும் கொண்டுள்ளனர்? வன்முறைமிகு மோதுகை முகவரிடமிருந்தும் மற்றும் கட்டமைப்பு அங்கங்களிருந்தும் ஓர் எதிர்விளைவான எதிர்வினையை உருவாக்காமல் அவர்களால் யதார்த்தபூர்வமாக என்ன செய்ய முடியும்?



## 6. செயற்பாடுகளிற்கான கிடைவழிகள்

அபிவிருத்தி முகவர்களின் பிரதான அக்கறை உதவிச்சேவைகளையும் ஆலோசனைகளையும் வழங்குவது, அதேபோலவே எந்தவித தீங்கினையும் ஏற்படுத்தாது பிரதேச மோதுகைப் பரப்பினிலே உள்ள செயல் நிறைவேற்றுநர்களுடன் ஊடாடுவதற்கான செயற்திறன்மிகு வழிகளைக் கண்டு பிடிப்பது (அன்டர்சன் அபிவிருத்தி முகவர்களின் பிரதான அக்கறை உதவிச்சேவைகளையும், ஆலோசனைகளையும் வழங்குவதாகும். அதேபோல் எந்தவித தீங்ககளையும் ஏற்படுத்தாது பிரதேச போதுகைப் பரப்பினிலே உள்ள செயல் நிறைவேற்றநர்களுடன் ஊடாடுவதற்கான செயல்திறன்மிகு வழிகளைக் கண்டுபிடிப்பது (அன்டர்சன் 1999). மேலும் பிரதேச மட்டத்திலே மோதுகை மாற்றுநிலையாக்கத்துக்குப் பங்களிப்புச் செய்வதில்கூட அவர்கள் அக்கறை காட்டலாம். ஆனால் சமூக அபிவிருத்தியின் சூழமைவினுள் வலுவூட்டற் செயல்முறைகள் மோதுகை மாற்று நிலையாக்கத்துக்கு உகந்தவையா, மேலும் அதன் மூலம் சமாதானத்துக்கான பிரதேச ஆற்றலை உறுதிப்படுத்த உகந்தவையா?

சமாதானததுக்காகப் பிரதேச ஆற்றலை அடிப்படையாகக் கொண்டிருக்கும் அணுகுமுறையானது, மோதுகையில் இருக்கும் சமூகத்தின் முதற்பணி அகிம்சை வழியிலான மோதுகைத் தணிப்பு வழிமுறை அமைப்புகளை மீளக்கற்பது மற்றும் சம்பந்தப்பட்ட நிறுவன ஏற்பாடுகளை மீள நிறுவுவதும் என வலியுறுத்துவது சரியாயின், சமூக அபிவிருத்திக்கான பங்கேற்புடனான அணுகுமுறைகள் பிரதேச

குழுக்களையும், சுய-உதவி நிறுவனங்களையும் மீள உருவாக்குவதன்மூலம் அவ்வாறான முறைவழிகளுக்கு ஆதரவு அளிக்கக்கூடியதாக இருக்கும். சிக்கலான அவசர சூழ்நிலைகளில், சமூக மட்டத்திலே பங்கேற்புடனான மற்றும் வலுவூட்டற் செயல்முறைகளினை வசதிப்படுத்த நிவாரண மற்றும் அபிவிருத்தியின்பால் திசைமுகப்பட்ட முகவர்கள் எடுக்கும் முயற்சிகளில் பின்வருவனவற்றை விசேடமாகத் தேடுவார்கள்.

* கலந்துரையாடுவதற்கான அரங்குகளின் உருவாக்கத்தை ஊக்கப்படுத்துதல் (உ-மாக PRA செயலமர்வின்போது).

* சமூக அடிப்படையிலான அமைப்புக்களை முன்னெடுப்பது அல்லது பலப்படுத்துவது.

* ஜனநாயகச் செயல்விதிகளின் உருவாக்கத்தினை மேம்படுத்துவது.

* கிராம அபிவிருத்திச் செயல்முறையினுள்ளே குறிப்பிட்ட நலன்குழுக்களின் ஒன்றிணைப்பை முன்னேற்றுதல்.(பெண்களின் குழுக்கள், இளைஞர் குழுக்கள் என்பவற்றை ஊக்குவிப்பது மூலமாக)

நீடித்த யுத்தத்தின் அனுபவம் பாதிக்கப்பட்ட எம் அனைவர்மீதும் ஏற்படுத்தியுள்ள தாக்கத்தினைக் கருத்திற் கொள்கையில், மோதுகைச் சூழ்நிலைக்கு பங்கேற்புடனான மற்றும் வலுவூட்டற் முறைவழிகளினை அறிமுகப்படுத்துவது ஒருபோதும் இலகுவாக இருக்கப்போவதில்லை என்பது தெளிவாகின்றது.

மோதுகைப் பிரதேசங்களிலுள்ள செயல்நிறைவேற்றுநர்கள் அவர்களின் நாளாந்த வாழ்க்கையை நேரடியாகப்பாதிக்கும் சிறியவிடயங்களில்கூட எந்தவிதமான தீர்மானம் மேற்கொள்ளும் அதிகாரமும் வழங்கப்படாமலேயே இருந்து வருகின்றனர். குறிப்பாக, அகதிகளும், உள்நாட்டில் இடம் பெயர்ந்தோரும் நிவாரணத்திலே நீண்டகாலத்துக்குத் தங்கியிருப்போராக மாறிவிடுவார்கள். இதன்மூலம் இவர்கள் நலனோம்புகைகளின் எதிர்வினையற்ற பெறுநர்களாகத் தரம் குறைக்கப்பட்டுவிடுவார்கள்.



இவ்வகையான தங்கியிருத்தல் குறைபாட்டின் கீழ், மக்கள் தமது சொந்த வாழ்க்கை தொடர்பாக எவ்விதமான தீர்மானத்தினையும் மேற்கொள்ளமுடியாதவர்களாக மாறிவருகின்றனர். அவர்கள் அகதி முகாம்களில் வாழ்கின்றனர். அங்கே கடுமையான விதிகள் நிர்ணயிக்கப்படுகின்றன. மேலும் கடும் நிபந்தனைகளை விதிக்கின்ற மனிதநேய முகவர்கள் வழங்கும் நிவாரணத்தின் அடிப்படையிலே வாழ்ந்துவருகின்றனர். யுத்தப்பிரபுக்களும் மற்றும் பிரதேசத்தின் வன்முறைகளின் ஏகபோக உரிமைகளைக் கொண்டிருப்போரும் தமது தீர்மானங்களையும், ஆட்சியையும் மக்கள்மீது திணிக்கின்றனர். எனவே மக்களைப் பிரதேச மட்டத்தில் அபிவிருத்தி முறைவழிகளில் மீள ஒன்றிணைப்பதானது, சிவில் சமூகத்தின் நிறுவன ஏற்பாடுகளின் மீள் நிலைநிறுத்தல்களுக்கும், பிரதேச மட்டத்தில் பிரபல பங்குபற்றுநர்களுக்கும் அத்தியாவசியமான செயற்தூண்டலாக அமையும்.

இவ்வாறான முறைவழியில் மக்களின் பங்கேற்பு வருமானத்தை அதிகரிக்கும் சிறு கடன் மற்றும் சேமிப்புச் செய்திட்டம் போன்ற வற்றினால் ஊக்கப்படுத்தப்படுகின்ற ஒரு குறிப்பிட்ட சூழ்நிலையினை சச்சிதானந்தம் (1996, ப 206) விபரிக்கின்றார். இதிலே ஜனநாயகச் செயல்விதிகள் புதிதாக ஆரம்பிக்கப்பட்ட சமூக அடிப்படையிலான சேமிப்பு அமைப்புக்களுடன் செயற்திறன்மிகுமுறையில் ஒருங்கிணைக்கப்பட்டன. இங்கே தெரிவுசெய்யப்பட்ட நிறைவேற்றுக்குழு, நிதி சார்ந்த விடயங்கள், செய்திட்டங்கள் மற்றும் பயனாளிகள் சம்பந்தப்பட்ட அனைத்துப் பிரதான தீர்மானங்களுக்கும் பொறுப்பாக்கப்பட்டிருக்கின்றது. குழுவின் செயல்விதிகளின்கீழ் கிரமமான பின்னூட்டல்கள், கட்டமைப்பிடப்பட்ட மேற்பார்வைகள் மற்றும் சுழற்சித் தலைமைத்துவம் போன்ற பல்வேறுவிதமான ஜனநாயக வழிமுறை அமைப்புக்கள் படிப்படியாக உருவாக்கப்படுகின்றன. இவை நிறுவனங்களுக்கிடையிலான மோதுகைகளைத் தீர்க்க உதவுகின்றன.

குழுவிலே ஆர்வத்துடன் பங்கேற்குமாறு குறிப்பாகப் பெண்கள் ஊக்கப்படுத்தப்பட்டனர். பொதுவாக, பல்வேறு இயங்கும் அமைப்புக்களுக்கிடையிலான அதிகாரத்தொடர்புகள்பற்றிய போதிய கண்காணிப்பு மற்றும் தெரிவு செய்யப்பட்ட குழுக்களின் பயன்பாடு ஆகியவற்றைக்கொண்ட இந்த சமூக அடிப்படையிலான சேமிப்பு அமைப்புக்களின் உருவாக்கமானது பிரதேச மக்களின் பங்கேற்பு அதிகமான அளவுக்கு அதிகரிக்கும் என்பதை நிச்சயப்படுத்தியது என்பதை இடையீட்டாளர்கள் கண்டார்கள். இது அமைப்பின் உறுப்பினர்களுக்கு மத்தியில் உண்மையான உரித்தாண்மை உணர்வினை ஏற்படுத்தியது.

இன்னும், அவ்வாறான விழிப்புணர்வு எழுப்பும் ஏதாவது முறைவழிகள் பெருமளவு பொருட்களையும், மனித வளங்களையும் நீண்டகாலத்துக்குத் தேவைப்படுத்தும். பாதுகாப்பு தொடர்பாக நாளுக்கு நாள் மாறுகின்ற கள நிலைமைகள் காரணமாக, மக்களை அவர்களது வீடுகளில் இருந்து வெளியேற்றப் பலவந்தப்படுத்தும் இந்நிலைமைகளால் விளைவுகள் பொதுவாக நிலைபேறற்றவையாகும். எனவே இக்காரணத்தினால், இவ்வாறான முயற்சிகள் பயன்மிக்கவைதானா என்ற கேள்வி எழுகின்றது. மிக அதிகமான சந்தர்ப்பங்களில், அவை மண் கோட்டைகளின் பயனற்ற கட்டிடங்களாகவே தோன்றுகின்றன. எவ்வாறாயினும், இவ்வாறான முன்னெடுப்புக்கள் மக்கள் எவ்வாறு அவர்களின் சொந்த சமூக அடிப்படையிலான ஜனநாயக நிறுவனங்களை அர்ப்பணிப்புமிக்க தலைமைத்துவத்துடன் சேர்ந்து உருவாக்கவேண்டும் என்று கற்பித்து, மேலும் அவர்களுக்கு சமூகம் மற்றும் ஆட்சிக் கட்டமைப்புகளின் பயன்மிகு முகாமைத்துவத்திறன்கள் மற்றும் அறிவினைப் பெற உதவுமாயின் அவை பெறுமதி மிக்கவைதான் எனச் சில ஆசிரியர்கள் வாதிடுகின்றனர்.

இவை அழிக்கப்பட்டாலுங்கூட, பதற்றநிலைகள் தணிக்கப்பட்டதன் பின் இந்த நிறுவனங்களைப் பொதுவாக மீளக் கட்டியெழுப்பலாம்.

சமூக மட்டத்திலே பிரதேச வலுவூட்டற் செயன்முறைகளினதும், நிறுவன உருவாக்கத்தினதும் கருதப்படாத தாக்கங்களினைத் தெளிவாகக்காட்டுகின்ற ஏனைய பல உதாரணங்கள் இருக்கின்றன. திருகோணமலை மாவட்டத்தின் விடுவிக்கப்படாத பிரதேசத்தில் (எல்ரிரிஈ கட்டுப்பாட்டிலுள்ள) டச்சு அ.சா.நிறுவனத்தின் சேமிப்புச் செய்திட்டமான சோவா (ZOA) வினைப்பற்றி கிளெம் (2001) விபரிக்கின்றார். ஆரம்பத்திலே இச்செய்திட்டமானது யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட, மிகவும் வறிய, மிகவும் பலவீனமான மக்களை சேமிப்புடனான சுழற்சி நிதிமுறை அமைப்பினூடாக வலுப்படுத்துவதை நோக்கமாகக்கொண்டிருந்த அதேவேளை, புதிதாக உருவாக்கப்பட்ட கிராமிய சேமிப்பு அமைப்புக்களின் மீதான எல்ரிரிஈயின் கணிசமான செல்வாக்கினையும், அதிகாரத்தையும் வெளிச்சத்திற்குக் கொண்டுவருவதற்குப் பின்பு உதவியது. காலம் செல்லச் செல்ல, சேமிப்புக்குழுக்களினால் குறிப்பிட்ட தேவைக்கென ஒதுக்கிவைக்கப்பட்டவைகளைத் தவிர, வேறு அபிவிருத்திச் செய்திட்டங்களுக்காகவும் நிதிகள் திருப்பப்பட்டன. எல்ரிரிஈனால் தீர்மானங்கள் திணிக்கப்பட்டன. இதனால் சேமிப்புக் குழுவின் பங்கேற்புடனான தீர்மானம் மேற்கொள்ளும் முறைவழிகள் செயற்திறனுடன் இடம்பெறவில்லை. இவ்வாறாக பிரதேசக் குழுக்களையும், கட்டமைப்புக்களையும் உண்மையாக வலுப்படுத்த எடுக்கும் வசதிப்படுத்தல் முயற்சிகளின் காரணமாக, மறைமுகமாக எல்ரிரிஈனர் வலுப்படுத்தப்படுவதற்குத் தாம் வகிக்கின்ற திட்டமிடாத (முகவர் அங்கம்) பாத்திரத்தின் காரணமாக அசௌகரியமிக்க, தர்மசங்கடமான நிலைக்கே வசதிப்படுத்தும் கொடை வழங்குனர்கள் முகம் கொடுத்தனர். கொடை வழங்குனர்களுக்கு இருந்த ஒரே மாற்று வழி சேமிப்புத் திட்டத்தினைக் கைவிடுவதாகும். ஆனால், அது போரினால் பாதிக்கப்பட்ட குழுக்களை வலுவற்றவர்களகவும், பாதிக்கப்படக்கூடியவர்களாகவும் விட்டுவிடும் என்கின்ற காரணத்தினால் நியாயமான தீர்வாகத் தென்படவில்லை.

கிளெம் எடுத்துக் காட்டுகின்ற இன்னுமொரு திட்டமிடப்படாத அல்லது கருதப்படாத விளைவுதான் இராணுவம் அல்லது எல்ரிரிஈ போன்ற ஆயுதக்குழுக்களின் அச்சுறுத்தலாகும். இந்த அச்சுறுத்தல்கள் சமூகங்களுக்கிடையேயான சமூகக் கட்டமைப்புக்கள்மீது வேறு எவ்விதக்கருத்திட்ட

இடையீட்டினை விடவும் கூடுதலாகச் செல்வாக்குச்செலுத்துகின்றன. இதற்கு ஒரு உதாரணத்தினைத் திருகோணமலையிலுள்ள அகதி முகாமிலிருந்து எடுத்துக் காட்டலாம். அங்கே நடந்த ஒரு சம்பவத்தில், முகாமில் வாழ்ந்த மக்கள் உள்;ர் சமூகத்தவரின் ஆதரவுடன், எல்ரிரிஈயுடன் தொடர்புபட்டவர்கள் என்ற சந்தேகத்தின்பேரில் இராணுவத்தால் சுடப்பட்டு இறந்த தமது உறவினர்களின் சடலங்களைத் தம்மிடம் கொடுக்கவேண்டும் என்று கூறி இராணுவத் முகாமுக்கு முன்னால் ஆர்ப்பாட்டம் நடத்தினர். உள்;ர் மக்களைப் பயமுறுத்துவதன் மூலம் இராணுவத்தினர் எதிர்வினையாற்றினர். மாலை 6 மணிக்குப்பின்பு வீதியில் தென்படும் எந்த இளைஞரும் சுடப்படுவர் என்று அவர்கள் உத்தரவு பிறப்பித்தனர். இந்தப் பயமுறுத்தலினால் அச்சமடைந்த உள்;ர் மக்கள், அகதி முகாமில் வாழ்ந்த மக்களுக்கு வழங்கிய ஆதரவிலிருந்தும் பின்வாங்கினர். இந்த இரண்டு குழுமங்களுக்கும் இடையிலான சமூக உறவுகள் இதன்விளைவாக மோசமடைந்தன. கிராம மக்கள் இராணுவத்தினருடன் பிரச்சினைப்பட்டதன்பின், பகைமை பகிரங்கமாக வெடித்தது. இப்பிரச்சினைக்கு அகதி முகாம் மக்கள்தானகாரணம் என கிராமத்தவர்கள் குற்றம் சாட்டினர். எனவே வலுவூட்டல் முறைவழிகள் அச்சுறுத்தல் சூழ்நிலைகளில் அல்லது அதிகாரவரிசையிலானதும், அதிகாரப் போக்குமிக்கதுமான அதிகாரக் கட்டமைப்புச் சூழமைவிற் கூடச் சாத்தியப்படுமோ என்ற கேள்வியை இவைபோன்ற சம்பவங்கள் எழுப்புகின்றன.

உள்ளூர் மக்களின் நடவடிக்கைகளுக்கான ஆற்றல் சுருக்கப்படுவதனால் அவர்கள் வலுவூட்டப்பட்டவர்களாக மாறுவதற்குப்பதிலாக, வலுவிழக்கச் செய்யப்பட்டவர்களாகவே உணருவார்கள் போலத்தோன்றும். உண்மையிலேயே, வன்முறைமிகுந்த ஒரு சூழலிலே, பிரதேச மக்களுடன் முயற்சிக்கப்பட்ட வலுவூட்டற் செயன்முறையானது நெருப்புடன் விளையாடுவதற்கு ஒப்பானதாக இருக்கமுடியும் இலங்கையின் யுத்தத்தால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களின் சூழமைவிலே, பிரதேசத்தலைவர்கள், விசேடமாக சமூக முயற்சியாளர்கள் பெரும்பாலும் வன்முறையினால் அச்சமூட்டப்படுகின்றார்கள். அவர்கள் கொல்லப்படுவதையிட்டும், அல்லது காயமேற்படுத்தப்படுவதையிட்டும் பெரிதும் அச்சம் அடைந்தவர்களாகக் காணப்படுகின்றனர். எனவே அவர்கள் தம்மைப் பிரதேசத்தலைவர்களாக வெளிப்படுத்தி, மிகவும் அவதானிக்கப்படத்தக்கவர்களாக மாறாமல் இருப்பதில் மிகவும் கவனமாக இருப்பார்கள். அவ்வாறாகத் தம்மை வெளிக்காட்டுவது ஆயுதக் குழுக்களினால் தாம் மிகவும் பாதிக்கப்படுவதற்குக் காரணமாகும் என அவர்கள் உணர்ந்துள்ளனர். இதன் விளைவாக யார், என்ன முறைவழிகளை அவர்களின் குறிப்பிட்ட செல்வாக்குப்பரப்பினில் முன்னெடுக்கின்றனர் என்பதை மோதுகைத் தரப்பினர் எப்போதும் கவனமாக அவதானித்துக் கொண்டே இருப்பார்கள்.

எனவே அபிவிருத்தி முகவர்கள் மோதுகையில் சம்பந்தப்பட்ட பல்வேறு தரப்பினர்களினதும் நலன்களைச் சமநிலையில் பேணுவதில் மிகக்கவனமாக இருக்கின்ற அதேவேளை, வறுமை ஒழிப்பு, உணவுப் பாதுகாபபு, சுய-உதவி மேம்படுத்தல் போன்ற அவர்களின் சொந்தக் குறிக்கோள்களையும் முன்னெடுத்துச்செல்லவேண்டும் என்பதையே யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட இலங்கை அனுபவங்கள் எடுத்துக்காட்டுகின்றன. இது குறிப்பிட்ட பிரதேசத்தில் அதிகாரத்துக்கான வழிவகைகளையும், வன்முறைக்கான ஏகபோக உரிமையையும் கொண்டிருக்கும் குழுவினருடன் பேரம்பேசும் முறைவழியினைப் பொதுவாகவே சம்பந்தப்படுத்தும்.

இருப்பினுங்கூட, முகவர்கள் தமது வெளியேற்ற உபாயத்தினைப் பற்றியும் தெளிவாக இருக்கவேண்டும். எந்த அளவு தூரத்துக்கு அவர்கள் விட்டுக்கொடுக்கத் தயாராக இருக்கின்றார்கள்? எந்தச் சந்தர்ப்பத்தில் தாம் நன்மையைவிட தீங்கினையே அதிகம் செய்கின்றோம், உண்மையிலேயே அதிகாரத்தில் உள்ள குறிப்பிட்ட குழுக்களையே அங்கீகரித்து பலப்படுத்துகின்றோம் என்ற உண்மையை அவர்கள் சந்திக்க வேண்டுமா? தமது முயற்சிகளினால் எக்குழுக்கள் ஆதரவு பெறுகின்றன மற்றும் எக்குழுக்கள் விடுபடுகின்றன என்பதையிட்டு இடையீட்டாளர்கள் எப்போதும் பிரக்ஞை உடையவர்களாக இருக்கவேண்டும்.

சிக்கலான அரசியல் அவசரநிலைமைகளினைக்கொண்ட சூழலிலே, அதிகமாக இனக்குழுமத்தின்பால் சமநிலைப்பட்ட உபாயத்தின்சார்பில், தேவையின்பால் திசைமுகப்பட்ட அணுகுமுறையினைக் (இனத்துவத்தினைப் பொருட்படுத்தாது வறியோருக்கு உதவுதல்) கைவிடவேண்டியது தேவையாக இருக்கும் என்பதை அவர்கள் காண்பார்கள். (பவர், பிக்டன் ரூ கோர்ப் 2000).

சிக்கலான அவசர நிலைச் சூழ்நிலைகளில் பணியாற்றுகையில் செய்திட்ட இடையீட்டாளர்கள் முகம் கொடுக்கின்ற இக்கட்டு நிலைமைகளினை கருத்திற்கொண்ட கிளெம் (2001) "அறிவூட்டப்பட்ட பயனீட்டு வாதம்" எனும் உபாயத்தினைப் பரிந்துரை செய்கின்றார். அடிப்படையிலே இது சம்பவத்திற்கு சம்பவ(பயனீட்டுவாத) அடிப்படையிலே ஒரு சாத்தியவள நிலைப்பாட்டினை எடுப்பதையும், அதேவேளை விடயங்களின் பொருத்தப்பாட்டினையும், சிக்கற்தன்மையினையும் கருத்திற் கொள்வதையும் அர்த்தப் படுத்துகின்றது (அறிவூட்டப்பட்ட). இங்கே என்ன முக்கியமானது எனில், கொடை முகவர்கள் தாம் முகம் கொடுக்கும் இக்கட்டு நிலையினைப் பற்றித் தெரிந்துகொண்டு, விட்டுக் கொடுப்பினை எங்கே ஏற்றுக்கொள்வது மற்றும் உருவாக்கப்பட்ட மைய பெறுமானங்களை எங்கே பற்றிப்பிடிப்பது என்பதைக் கவனமாகத் தீர்மானிக்கவேண்டும்.

மோதுகைச் சூழ்நிலைகள் அவற்றின் இயல்புகளைப் பொறுத்தவரை எப்போதும் முன்கூற முடியாதவைகளாக இருக்கின்ற காரணத்தினால் ,இலக்கு குழுக்களின் தேவைகளுக்கு ஏற்றவகையில் தொழிற்படத் தக்க முறையில் செய்திட்டங்களும் ஒரு நெகிழ்வுத்தன்மைமிக்க அணுகுமுறையினை கொள்ளவேண்டும் (சச்சிதானந்தம் இதைக் "கட்டமைப்பிடாதவை" என அழைப்பார்). இது கொடைநிறுவனங்களின் முகாமை தா்க்கங்களுக்கு வேறுபட்டவையாக இருக்கலாம். (சச்சிதானந்தம் 1996, ப 206).

சமூக அபிவிருத்திப்பணியின் இறுதி இலக்கானது, பேரம்பேசுதலுக்கும், அதேபோலவே கூட்டு நடவடிக்கைகளுக்காகப் பொருத்தமானதும், உள்ளடக்குகின்றதுமான தீர்வுகளைப் பற்றிப் பேச்சுவார்த்தை நடத்தவும், பலவீனமான குழுமங்கள் தமது நன்மைகளுக்காக (நியாயமான) குரல் கொடுப்பதற்கான வாய்ப்புக்களை வழங்குகின்ற சந்தர்ப்பங்களை உருவாக்குவதாகவும், நிறுவன ஏற்பாடுகளைப் பலப்படுத்துவதாகவும் இருக்கவேண்டும். எந்த நிறுவனங்கள் தமது நடவடிக்கைகளால் மற்றையோரின் இழப்பில் பலப்படுத்தப்படுகின்றன என்பதை இடையீட்டாளர்கள் சரியாக மதிப்பிடுவது மிகவும் இன்றியமையாததாகும். 449

சமுதாய நிலைப்பட்ட நிறுவனங்களை கட்டியெழுப்ப முற்படுகின்ற போது வேண்டத்தகாத சூழ்நிலை ஏற்படலாம். உதாரணமாக, அந்த சமுதாயத்தின் பாரம்பரிய அதிகார முறைமை மற்றும் உள்ளூர் ஆளுகை முறைமைக்கான நிறுவகங்கள் புதிய கட்டமைப்புக்களால் பாதிக்கப்படலாம். மோதுகையின் ஒட்டுமொத்தமான பின்புலத்தில் வைத்தே இந்த அமைப்புக்களின் பாத்திரத்தினை இடையீட்டாளர்கள் கவனமாகச் பார்க்கவேண்டும். அவர்கள் சமாதானத்துக்கு உள்ளார்ந்த ஆற்றலை வழங்குகின்றார்களா? அவர்கள் இன்னும் அதிகமாக மற்றவர்களை உள்வாங்கக் கூடியவர்களாக மாற்றும்வகையில் சீர்திருத்த முடியுமா? உ-மாக : நலன்கள் கிட்டாத குழுவினருக்கும் வேண்டிய இடத்தை கொடுத்தல்.

அத்துடன், மிகவும் முக்கியமான விடயம் உதவுதுணை வழங்குநர் அல்லது சமூக அணிதிரட்டுவோரின் பாத்திரமாகும். வலுவூட்டற் செயன்முறைகளுக்கு ஆதரவு வழங்குவதற்காக நடைபெற்று வருகின்ற முயற்சியிலே ஒரு உதவுதுணை வழங்குநர் கிராமத்தின் பல்வேறு நலன்குழுக்களையும் கவனமாகக் கருத்திற்கொண்டு சிலவேளைகளில் ஓர் இணக்குவிப்பாளராகவும் செயற்படவேண்டியிருக்கும். இதிலே அவர் பகிரங்க அரங்குகளிலே தொடர்பாடுகின்ற மற்றும் பேச்சுவார்த்தை நடத்துகின்ற ஆற்றல்களிலுள்ள சமமின்மையை சமப்படுத்தவேண்டும் என்பதுவும், தங்களது இலட்சியங்களைப் பாதுகாக்கப் பலவீனமான குழுக்கள் எடுக்கும் முயற்சிகளுக்கு ஆதரவு கொடுக்க வேண்டும் என்பதுவும், எப்போதும் நடுநிலையான நிலைப்பாட்டுடன் சகல தரப்பினரதும் ஆதரவினையும், நம்பிக்கையையும் பேணிவரவேண்டும் என்பதுவும் அர்த்தப்படுத்தப்படுகின்றது.

இவ் விடயத்தில் பாத்தியதை உடையோராக இருக்கும் எல்லோரிடததும் நம்பிக்கை உணர்வும் ஏற்புடமை உணர்வும் கொண்டிருக்கிறார்கள் என்பதை உறுதிப்படுத்துவது சமுதாய உதவிதுணையினருக்கு அத்தியாவசியமாகும். அதிகமான தேசியப் பதவி உறுப்பினர்கள் மோதுகையிலுள்ள ஒருதரப்புடன் அல்லது மற்றைய தரப்புடன் சிலவகைத் தொடர்பினைக் கொண்டவர்களாகவே சிக்கலான அரசியல் அவசர சூழ்நிலைகளுக்கு வருவார்கள். இதற்கான காரணம் ஓர் இனக் குழுமத்துடன் அல்லது சமூக வகுப்புடன் அல்லது குறிப்பிட்ட ஒரு அரசியல் கட்சியிலுள்ள அங்கத்துவத்துடன் அவர்களுக்கு இருக்கும் பற்றுறுதியாக இருக்கலாம். பக்கச்சார்புமிகு ஆட்சிகளிலும், மற்றும் பல சிவில் யுத்தங்களிலும் மோதும் தரப்புக்கள் அல்லது சக்திமிகு பாத்தியதை உடையவர் அடிக்கடி சமூகச் செயன்முறைகளுடன் இடையீடுசெய்து பிரதேச மட்டத்திலே அவர்களின் சொந்தப் பிரதிநிதிகளையும், ஆதாயங்களையும் உருவாக்கிக்கொள்வார்கள். இதனால், இலகுபடுத்துநர்களின் அதிகாரம் வரையறுக்கப்பட்டதாகவே இருக்கும். ஏனெனில் அரசியல் ஆதரவாளர்கள் அல்லது களத்தளபதிகளுடன் குறிப்பிட்ட தொடர்பினைக்கொண்ட பேரம்பேசல் முறைவழியில் ஈடுபட்டுள்ள செயல் நிறைவேற்றுநர்களுக்குச் சவால் விடுப்பதற்கு இவர்கள் அச்சம் கொண்டிருப்பதே ஆகும். வசதிப்படுத்துநர்களிடமிருந்து எதிர்பார்க்கப்படுகின்ற மோதுகை முகாமைத்திறன்கள் முக்கியமானவையாகும். அவர்களைக் குறைத்து மதிப்பிடக்கூடாது. கிரமமான பயிற்சி மற்றும் மேற்பார்வை மூலம் அவர்கள் பலப்படுத்தப்படவேண்டும்.

பங்கேற்பு, வலுவூட்டல் மற்றும் மோதுகைமாற்று நிலையாக்கம் என்பவற்றுக்கு இடையிலான தொடர்பின் பிரதானமான அம்சங்கள்பற்றிப் பரிசீலித்தும், அதேபோலவே சமூக அபிவிருத்திப் பணியின் சூழமைவினிலே பங்கேற்புமிகு மற்றும் வலுவூட்டல் அணுகுமுறைகளின் கருத்தியல் மற்றும் நடைமுறைப்பிரச்சினைகள் சிலவற்றினை ஆராய்ந்தும் முடித்தபின், மோதுகை மாற்றுநிலையாக்கம் மற்றும் பிரதேச சமாதான உருவாக்க சூழமைவில் இந்த அணுகுமுறைகளின் பாத்திரம்தொடர்பாக விசேட கவனம் செலுத்தி, இந்த அணுகுமுறைகளின் ஆற்றல்கள் மற்றும் வரையறைகள்பற்றிய ஒரு பூர்வாங்க மதிப்பீட்டினை நாம் மேற்கொள்ள வேண்டும். இவ்வாறான மதிப்பீடு பூரணமான ஒன்றாக இருக்கும் என்றோ அல்லது அது களப்பணிக்கான ஒரு முன்மாதிரியாகக் கொள்ளப்படவேண்டும் என்றோ கூறவில்லை. பெட்டி 6ல் கருத்திற் கொள்ளப்பட்டுள்ள விடயங்கள், இலங்கையின் யுத்தவலயங்களில் உள்ள அபிவிருத்தி ஒத்துழைப்பின் அனுபவங்களினையே பிரதானமாக அடிப்படையாகக்கொண்டுள்ளன. மேலும் அவை அந்தச்சிக்கலான அரசியல் அவசர நிலைமைகளின் குறிப்பிட்ட சூழமைவுசார் காரணிகளைப் பிரதிபலிக்கின்றன.



**பெட்டி 6: பிரதேச மோதுகை மாற்றுநிலையமாக்கத்தின் மீதான தாக்கம்**

| சாத்தியப்பாடுகள் | கட்டுப்படுத்துகைகள் |
|---|---|
| பங்கேற்புமிகு முறைகள் சமூக மட்டத்திலே தீர்மானம் மேற்கொள்ளுதலில் வெளிப்படையான தன்மைக்கு உதவுகின்றன.<br><br>பங்கேற்பு மிகு கிராமியச் செயலமர்வுகள் (PRA) பல்வேறு விதமான உபாய மற்றும் சமூகக் குழுக்கள் தமது நிலைப்பாட்டுக்காக குரல் எழுப்பக்கூடிய தளத்தினை வழங்கலாம். எனவே<br><br>சமூக அபிவிருத்தியானது பிரதேசப் பேரம் பேசுதலுக்கும், பேச்சுவார்த்தை | கருத்திட்டவளங்களுக்காகப் பேரம்பேசுதல் செயல் முறைகள் அல்லது கிராமமட்டத்திலே அங்கீகாரம் என்பன புதிய மோதுகைகளைத் தூண்டுவதற்கான அல்லது மோதுகை ஆற்றலை அதிகரிப்பதற்கான உள்ளார்ந்த ஆபத்தினைக் கொண்டுள்ளன. (தீங்கு செய்தல்).<br><br>பிரதேச களப்பணியாளர்களும், சமூக இலகுபடுத்துநர்களும் பிரச்சினையின் பாகமாக இருக்கலாம். சமூக முறைமையின் ஒரு பகுதியாக, |

| சாத்தியப்பாடுகள் | கட்டுப்படுத்துகைகள் |
|---|---|
| முறைவழிகளுக்கும் உதவி வழங்கலாம்.<br><br>சமாதானத்துக்காக பிரதேச ஆற்றல்களை உருவாக்குவதற்கான ஒரு சொத்தாக, பிரதேச நிறுவன ஏற்பாடுகளையும், சமூக முதலீடுகளையும் (மீள்) உருவாக்கப் பங்களிப்புச் செய்யலாம்.<br><br>பங்கேற்புமிகு செயன்முறையானது வன்முறை அல்லது ஆதரவுக் கலாசாரத்திற்கெதிராகப்பேசும் கலாசாரத்தை உருவாக்குகின்றது.<br><br>வலுவூட்டல் முறைவழிகள் பலவீனமான செயல்களை பலப்படுத்தலாம். மற்றும் சொந்த நலன்களையும் தேவைகளையும் வெளிப்படுத்துவதற்கான ஓர் அடிப்படையாக ஒரு பொதுவான ஒரு அடையாளத்தை உருவாக்கலாம்.<br><br>பங்கேற்புமிகு முறைவழிகளினூடான சமூக அபிவிருத்தியானது ஆட்சி முறைமையின் பல்வேற மட்டடங்களுக்கு இடையில் இணைப்புக்களை உரவாக்கலாம் அல்லது (மீள்) நிறுவலாம்(வறிய மற்றும் செல்வந்த, சேவை வழங்கநர்களுக்கு சமூகங்களும், பல்வேறு நிர்வாக மட்டங்களும்)<br><br>சமூக அணிதிரட்டுநர்கள் முகவர் பணியாளர்கள் என்ற ரீதியில் புறநிலை அவதானிப்பாளர்களாகச் செயற்படலாம். இது சமூக மட்டத்திலே கள நிலைமைகளைப் பலப்படுத்த உதவலாம் மற்றும்நீடித்த மோதுகைகளின் சூழ்நிலைகளிலே மனித உரிமை மீறல்களின் நிகழ்வு வீதத்தினைக் குறைக்கலாம். | அவர்கள் குறிப்பிட்ட சமூக, இன அல்லது அரசியல் குழுக்கள் மற்றும் இயக்கங்களின்பால் பக்கச்சார்பு கொண்டுள்ளனர்.(அல்லது மற்றவர்களினால் அவ்வாறு இவர்கள் இருப்பதாக உணரப்படுகின்றனர்).<br><br>பேச்சுவார்த்தை முறைவழிகளிலே வெளிப்படையான தன்மையினை ஊக்குவிப்பது என்பது எல்லாக் கலாசார அமைப்புக்களிலும் இலகுவான ஒன்றல்ல.<br><br>சர்வாதிகார அல்லது தரப்படுத்தல் முறைமைகள் தொடர்பாடல்மிகு முறைவழிகளைப் பின் வாங்கச்செய்யலாம்.<br><br>கலாசாரப் பாரம்பரியங்களில் இடையீடு செய்வது மறுபுறத்திலே மேலைத்தேய சித்தாந்தங்களின் காலனித்துவத் திணிப்பாக இலகுவாகப் புலனுணரப்படலாம்.<br><br>பல நாடுகளில் ஆதரவு வழங்கும் முறைமைகள் பலவீனமான மக்களுக்குச் சமூகப் பாதுகாப்பினை வழங்குகின்றன.வறிய மக்கள்இடர்நிலையின்போது பிரதேசத்தலைவர்களின் ஆதரவிலேயேதங்கி நிற்கின்றார்கள். வலுவூட்டலானது உரிய மாற்றீட்டினைவழங்காமலேயே இந்தப் பிணைப்பினைத் தளர்த்திவிடச்செய்யலாம்.<br><br>பேரம்பேசல் முறைவழியில் தோற்றவர்கள் எவ்வாறு எதிர்வினையாற்றலாம்? தமது நியாயமான பங்கினை அடைந்து கொள்ளவில்லை என்று உணருபவர்கள் மோதுகைத் தரப்பினரில் ஒருவரை அல்லது அரசியல் ஆதரவாளர்களை சம்பந்தப்படுத்தப் போவதாகப்பயமுறுத்தலாம்.<br><br>மோதுகையினால் பணம் சம்பாதிப்பவர்களின் தனிப்பட்டகாரணங்கள் கூட்டுநடவடிக்கைக்கும் வலுவூட்டலுக்குமான முன்னெடுப்புக்களுக்கு எதிராகச் செயற்படலாம். சிவில் யுத்தத்திலுள்ள மோதுகைத்தரப்பினர் வலுவூட்டப்பட்ட கிராம மக்களினைக்கொண்டிருப்பதில் அக்கறையில்லாது இருக்கலாம் அல்லது கிராமக்குழுக்களின்மீது தீர்மானங்களைத் திணிக்க முயற்சித்து அவர்களின் தன்னுரிமையினைப் பலவீனப்படுத்தலாம். |

**இருமனப்போக்கு**

சிலரை வலுவூட்டுவது, ஏனையவர்களின் வலுவகற்றலுக்கு இட்டுச்செல்லலாம். (பால் நிலை, வகுப்பு, இனத்துவம், சாதி). எனவே கொடை வழங்குனர் இடையீட்டின் தோல்வியாளர் யார் மற்றும் வெற்றியாளர் யார்?

- கொடைவழங்குனர் மத்தியில் காணப்படும் அதிகாரச் சமச்சீரின்மைகள் (வெளிநாட்டவர் எதிர் உள்நாட்டுப் பணியாளர்) பிரதேச வலுவூட்டல் செயன்முறைகளினைத் தூண்டி அதைத் தக்கவைப்பதற்காக எடுக்கப்படும் எக்கூட்டு முயற்சிக்கும் பொதுவாக எதிர்விளைவுகளையே கொடுக்கும்.
- பங்கேற்பு என்பது மோதுகைத்தீர்வுக்கு உதவிவழங்கலாம், ஆனால், புதிய மோதுகைகளையும் தூண்டலாம், அல்லது ஏற்கனவே காணப்படுகின்ற பதற்ற நிலையினை மோசமாக்கலாம்.
- தொழில்நுட்ப ஒத்துழைப்பு முகவர்கள் பொதுவாகத் தம்மை அரசியல்சாராத சேவை நிறுவனங்களாகவே கருதுகின்றனர். பங்கேற்புமிகு அணுகுமுறையானது அவர்களைப் பிரதேச மற்றும் பிராந்திய அதிகாரப்போட்டியில் ஈடுபடவைத்து அவர்களின் ஆணையினைத் தாண்டிச்செல்லவைக்கும் என்கின்ற காரணத்தினால், பங்கேற்புமிகு அணுகுமுறையினைப் பின்பற்றுவதைப்பற்றி அவர்கள் நன்கு எச்சரிக்கையாக இருக்கக்கூடும்.

452

ஒரு சமூக அரசியல் முறைமையிலே, ஒவ்வொரு செயல்நிறைவேற்றுநரும் ஒரு குறிப்பிட்ட அளவுக்குப் பக்கச்சார்புடையவரே. அபிவிருத்தி முகவர்கள் பொதுவாக எதிரிணையான நிறுவனங்களினூடாகவே பணிபுரிகின்றனர்.மோதுகையிலுள்ள எத்தரப்பினருடன் அவர்கள் நெருக்கமான தொடர்பினைக் கொண்டுள்ளனர்? குறிப்பிட்ட சமூக அல்லது இனக்குழுமங்கள் ஒரு நிறுவனத்தினில் ஆதிக்கம் செலுத்துகின்றனவா? சேர்ந்து பணியாற்றச் சிலரைத் தெரிவுசெய்வதன்மூலமும், ஏனையோரைப் புறக்கணிப்பதன்மூலமும், அவர்களுக்குப் பிரதேச நிறுவனங்கள் மத்தியிலே சிறந்தவர்கள் மற்றும்மோசமானவர்கள் என இலகுவாக முத்திரை குத்தப்பட முடியும். (Schlichte 2000).

## 7. முடிபுரை: சிக்கற்பாடுகள் நிறைந்த அவசர வேளைகளில் அபிவிருத்தி முகவர் நிலையங்கள் அரசியல் ஆற்றுகையாளர்களாக இடம்பெறல்

இந்த அத்தியாயத்திலே, அபிவிருத்தி முகாமை நிறுவனங்கள் சிக்கலான அவசர சூழ்நிலைகளில் தலையிட்டு, சகலபிரஜைகளையும் உள்வாங்குகின்ற அபிவிருத்தி நடவடிக்கைகளை ஊக்குவிப்பதற்கும் சில சமுதாயங்களின் வளர்ச்சிக்கும் உதவுகின்ற முறையிலும் அரசியல்நிலை ஆற்றுகையாளர்களாகச் செயற்படக்கூடிய நிலைமை பற்றி ஆராய்ந்துள்ளோம்.

அபிவிருத்திச் செய்திட்டங்களின் சூழமைவினுள் பொதுவான பங்கேற்புமிகு மற்றும் வலுவூட்டல் அணுகுமுறைகளின் கொள்கைரீதியான அடிப்படைகளை நாம் மீளாய்வுசெய்துள்ளோம். அத்துடன் கொடைவழங்குநர்களின் பாரம்பரிய முகாமைத்துவ முறைமையாற்றலுக்கும் மற்றும் மோதுகை மாற்றுநிலையாக்கக் கருத்தாடலினால் வலியுறுத்தப்பட்டவாறான வலுவூட்டலின் (பிரதேச) தேவைப்பாடுகளுக்கும் இடையிலான இசைவுப்பாங்கு பற்றிய பிரச்சினையையும் நாம் ஆராய்ந்துள்ளோம்.

PRA அல்லது சமூக அணிதிரட்டல் போன்ற பங்கேற்புமிகு மற்றும் வலுவூட்டல் அணுகுமுறைகளின் நடைமுறை அமுல்படுத்துகையானது, இந்த உண்மையான தளைகளிலிருந்து விடுவிக்கும் அணுகுமுறைகளின் பயன்மிகு புரிதலைப் பல சூழ்நிலைகளில் விளக்கிக்கூறியுள்ளன. இவ்வகையாகப் புரிந்துகொள்ளும்பொழுது, கொடைவழங்குநர்கள் மக்களை கருத்திட்டங்களின் திட்டமிடலிலும், அமுல்படுத்துகைகளிலும் வெறுமனே ஒன்றிணைக்கும் ஒரு செயலாக வலுவூட்டற் செயற்பாடு குறைக்கப்படுகின்றது.

சிக்கலான அவசர சூழ்நிலைகளினுள், பங்குகொளல் மற்றும் வலுவூட்டல் அணுகுமுறைகளுக்கான செயற்பரப்பினை இடையிடுவோர் கவனமாக மதிப்பிடவேண்டும். சிக்கலான அவசர சூழ்நிலைகளினுள் ஆற்றல்கள், மற்றும் கட்டுப்பாடுகள், வெற்றிக்கதைகள், தீங்கு செய்வதைத் தவிர்ப்பது பற்றிய கதைகள், மற்றும் கொடைவழங்குநர்கள் இடையிடுகை பொதுவான இக்கட்டு நிலைகள் என்பவற்றை நாம் விளக்கிக் காட்டினோம்.

விசேடமாக, இந்த இக்கட்டு நிலையினை மனதிலிருத்தி, மோதுகை மாற்றுநிலையாக்கத்தில் கவனம் குவிக்கும் கொடை வழங்குநர்கள் அடிப்படையில் அறிவூட்டப்பட்ட பயனீட்டுவாதத்தின் உபாயமூடாக வலுவூட்டல் முறைவழிகளையும், பிரதேச ஜனநாயக நிறுவகங்களை மீள உருவாக்கலையும் மனதார மேம்படுத்துவது எவ்வளவு முக்கியமானது என்பதை நாம் இன்னும் வலியுறுத்த விரும்புகின்றோம்.

"மக்கள் தமது தேவைகளையும், நலன்களையும் தெளிவாக வெளிப்படுத்தவும் மற்றும் ஒதுக்கப்பட்ட குழுமங்களதும் மற்றும் மிகவும் பலவீனமானவர்களதும் உரிமைகளையும், நலன்களையும் பாதுகாக்கவும் ஜனநாயக மயமாக்கல் இயலுமாக்குகின்றது. (OECD/DAC 1997 ப.30). இந்தப் பரப்பிலுள்ள கொடைவழங்குநர்கள் உதவியானது நிலையானதும், நிலைபேறானதுமான அபிவிருத்தியின் பரந்த மேம்படுத்தலின் ஒரு பகுதியாகப் பயன்படுத்தப்படவேண்டும். அது பலவீனமான மற்றும் நலன்கள் கிட்டாத குழுக்களுக்கு அவர்களின் மனித மற்றும் சட்ட உரிமைகள்பற்றிய அறிவினை வழங்குவதுடன் பிரஜாவுரிமையுடன் தொடர்புபட்ட உரிமைகள் மற்றும் பொறுப்புகளைப்பற்றியும் தெளிவுபடுத்திக்கொடுக்கவேண்டும்" (அதேஇடம் ப 40).



கொடைவழங்குநர்கள் இடையீடுகளின் வலுவூட்டல் அணுகுமுறைகள் ஓர் உண்மையான, பூரணமான பிரஜாவுரிமையின் அபிவிருத்திக்கு உதவுவதற்காக அங்கீகாரத்தின் பல அம்சங்களை ஒன்றிணைக்கவேண்டும். அங்கீகாரத்தின் அவ்வாறான செயல்முறைகள் கிராமியச் சமூகத்தின் எல்லைகளுக்கு அப்பால் வசதிப்படுத்தப்படவேண்டியிருக்கும். கொடைவழங்குநர் செய்திட்டங்கள் பிரதேச மட்டத்திலுள்ள செய்திட்ட இடையீடுகளை உள்;ராட்சி நிறுவனங்கள் மற்றும் அ.சா.நிறுவனங்களின் இடைநிலையுடன் இணைக்க வேண்டியிருக்கும். இதிலே, இடையீட்டின் பூரண உபாயத்திற்காக மோதுகைச் சூழமைவின் முக்கியத்துவம் எப்போதும் கருத்திற் கொள்ளப்படவேண்டும். கலந்துரையாடல் அரங்குகளை வசதிப்படுத்துவதும், பிராந்திய மட்டத்திலே ஒத்துழைப்புமிகு வலையமைப்புக்களை மேம்படுத்துவதும் வலுவூட்டல் மற்றும் அங்கீகாரத்திற்கான செயன்முறைகளைத் தூண்டுவதற்கு உதவலாம். அது பதிலுக்கு, பேரியல்பு-மோதுகையின் சில அடிப்படைக் காரணங்களின் நிலைமாற்றத்துக்கான ஒரு நுழைவுப் பிரதேசமாக செயற்படலாம். ஆனால், அதிகமான தீர்க்கப்படாத பிரச்சினைகள் தொடர்ந்தும் காணப்படுகின்றன. இப்பிரச்சினைகளுக்கு விடைகளைக் காண்பது சிக்கலான அவசரநிலைகளினுள்ளே கொடைவழங்குநர் கொள்கைகளின் சிறந்த நடைமுறைகளின் மிகவும் விரிவான பகுப்பாய்வினைத் தேவைப்படுத்தும். இதில் விசேடமாக சமூகத்தின்மீதும் அதேபோலவே இடையீட்டின் பிராந்திய மற்றும் தேசிய கண்ணோட்டத்தின்மீதும் கவனம் ஒருமுகப்படுத்தப்படும்.

## கொடை வழங்குநர்கள்

- அவர்கள் எவ்வாறு தமது நிர்வாக முறைவழிகளின் மட்டுப்படுத்தல்களைத் தாண்டிச்சென்று வலுவூட்டலின் (பிரதேச) ஒரு முறைமையாற்றலை ஏற்றுக்கொள்வதற்கான அவர்களின் முயற்சிகளில் அதிக நெகிழ்வுத் தன்மையினை அடைந்துகொள்வார்கள்?

- சிக்கலான அவசர சூழ்நிலைகளில் அபிவிருத்தி உதவிச்சூழமைவில் கிராம மற்றும் பிராந்திய மட்டங்களில் வலுவூட்டல் மற்றும் அங்கீகாரச் செயல்முறைகளினை இலகுபடுத்துவதற்குள்ள சிறந்த நடைமுறைகள் யாவை?
- சிக்கலான அவசர சூழ்நிலைகளில் முகங்கொடுக்கப்படும் இக்கட்டு நிலைகளினைக் கையாளுவதுபற்றிய கொடைவழங்குநர்கள் அனுபவங்களில் இருந்து கற்று, அறிவூட்டப்பட்ட பயனீட்டுவாதத்துக்கான ஆற்றலினை எவ்வாறு முகவர்கள் கட்டி யெழுப்புவார்கள்?

## 8. உசாவலும், மேலதிக வாசிப்பும்


Azar, E. 1990. *The Management of Protracted Social Conflict: Theory and Cases,* Aldershot: Dartmouth Publishing.

Anderson, Mary B. 1999. *Do No Harm: How Aid Can Support Peace – or War,* Boulder, CO: Lynne Rienner Publishers.

Baruch Bush, Robert A. and J. P. Folger 1994. *The Promise of Mediation. Responding to Conflict Through Empowerment and Recognitio*n, San Francisco: Jossey-Bass Publishers.

Bastian, Sunil and Nicola Bastian (eds.) 1996. *Assessing Participation. A Debate from South Asia,* New Delhi: Konark Publishers.

Bauer, Eberhard et. al. 1999. *Food Security and Conflict. A Participatory Development Concept for the Integrated Food Security Programme,* Berlin: Seminar für Ländliche Entwicklung.

Bauer, Eberhard, Christine Bigdon and Benedikt Korf 2000. "Anspruch und Wirklichkeit in der Konfliktbearbeitung: Was kann Entwicklungszusammenarbeit wirklich leisten? Das Beispiel Sri Lanka," *Peripherie 79, 43-68.*

Bauer, Eberhard and Volker Hoffmann 1997. "Participatory Rural Appraisal (PRA): Challenges and Recommendations," *Quarterly Journal of International Agriculture,* XXXVI, 1, 81-99.

Berthoin, A., M. Dierkes, J. Child, and I. Nonaka, (eds.) 2001. *Handbook of Organisational Learning and Knowledge,* Oxford: Oxford University Press.

Blackburn, James and Jeremy Holland (eds.) 1998. *Who Changes? Institutionalizing Participation in Development,* London: Intermediate Technology Publications.

Bigdon, Christine and Antonia Engel 2000. *Social Mobilization Concept for IFS,* Working Paper 28, Trincomalee: Integrated Food Security Programme Trincomalee (IFSP).

Bush, K. 1998. *A Measure of Peace: Peace and Conflict Impact Assessment of Development Projects in Conflict Zones,* Working Paper No 1, The Peace Building and Reconstruction Programme Initiative and the Evaluation Unit, Ottawa: International Development Research Centre.

Burton, J. (ed.) 1990. *Conflict: Human Needs Theory,* New York: St. Martin‘s Press.

Chambers, Robert 1994a. "The Origins and Practice of Participatory Rural Appraisal," *World Development,* XXII, 7, 953-969.

Chambers, Robert 1994b. "Participatory Rural Appraisal (PRA): Analysis of Experience," *World Development,* XXII, 9, 1253-1268.

Chambers, Robert 1994c. "Participatory Rural Appraisal (PRA): Challenges, Potentials and Paradigm," *World Development,* XXII, 10, pp1437-1454.

Chambers, Robert 1995. "Paradigm Shifts and the Practice of Participatory Research and Development," *in* Nelson and Wright, op.cit., 30-42.

Chambers, Robert and Irene Guijt 1995. "PRA – Five Years Later. Where are We Now?" in *Forests, Trees and People Newsletter* 26/27, pp4-13.

Fahrenhorst, Brigitte (ed) 2000. *Die Rolle der Entwicklungszusammenarbeit in gewalttätigen Konflikten,* Berlin: SID.

Fisher, Roger and William Ury 1981. *Getting To Yes: Negotiating Agreement Without Giving In,* Boston: Houghton Mifflin.

Freire, P. 1972. *Pedagogy of the Oppressed,* London: Penguin.

Goodhand, J. and D. Hulme 1999. "From Wars to Complex Political Emergencies: Understanding Conflict and Peacebuilding in the New World Disorder," *Third World Quarterly,* XX, 1, 13-26.

Goodhand, J. and N. Lewer 1999. "Sri Lanka: NGOs and Peacebuilding in Complex Political Emergencies," *Third World Quarterly,* XX, 1, 69-87.

GTZ 2001. *Krisenprävention und Konfliktbearbeitung,* Eschborn: GTZ.

Heinrich, Wolfgang 1999. "Förderung von Friedensprozessen durch Entwicklung und Zusammenarbeit. Lokale Friedenspotentiale müssen genutzt werden," *Entwicklung und Zusammenarbeit,* XXXX, 4, 106-109.

Klem, B. 2001. *Coping with Chaos. Dilemmas of assistance in the war-torn areas of Sri Lanka,* Nijmegen: Centre for International Development Issues.

Korf, Benedikt 2000a. "Ökonomie der Zeit – Über Wege zu Wassermühlen, Partizipation und Gender," *Entwicklungsethnologie*, IX, 1, 28-42.

Korf, Benedikt 2000b. *Promoting Communication and Dialogue. Review of Community Mobilization,* Working Paper 32, Trincomalee: Integrated Food Security Programme Trincomalee (IFSP).

Lederach, J.P. 1995. *Preparing for Peace: Conflict Transformation Across Cultures,* Syracuse, NY: Syracuse University Press.

Miall, Hugh, Oliver Rambotham and Tom Woodhouse 1999. *Contemporary Conflict Resolution*, Cambridge: Polity Press.

Moser, Caroline 1993. *Gender Planning and Development. Theory, Practice and Training,* London: Routledge.

Nelson, Nici and Susan Wright (eds.) 1995. *Power and Participatory Development. Theory and Practice,* London: Intermediate Technology Publications.

OECD/DAC 1997. *Development Assistance Committee. Guidelines on Conflict, Peace and Development Cooperation,* Paris: OECD Publications.

Ross, M.H. and J. Rothman (eds.) 1999. *Theory and Practice in Ethnic Conflict Management: Theorizing Success and Failure,* London: Macmillan Press.

Rothman, J. and V.J. Friedman 2001. "Identity, Conflict, and Organisational Learning," *in* Berthoin et al.,op. cit., 582-597.

Sachithanandam, S. 1996. "Participatory Approaches to Development under Civil War Conditions. The Experience in Batticaloa, Sri Lanka 1991-1995," *in* Bastian and Bastian, op. cit.

Schlichte, Klaus 2000. "Die Entwicklungszusammenarbeit und die Dynamik von gewaltsamen Konflikten," *in* Brigitte Fahrenhorst, op. cit., 45-54.

Sen, G. and C. Grown 1988. *Development, Crisis, and Alternative Visions: Third World Women's Perspectives,* London: Earthscan.

Shah, P. and M.K. Shah 1995. "Participatory Methods: Precipitating or Avoiding Conflict?" *PLA Notes*, 24, 48-51.

**Selected Manuals for PRA:**


Berg, Christian et al. 1997. *Introduction of a Participatory and Integrated Development Process (PIDEP) in Kalomo District, Zambia. Vol. II: Manual for Trainers and Users of PIDEP,* Berlin: Seminar für Ländliche Entwicklung.

Korf, Benedikt 2000c. *Field Guide to Participatory Needs Assessment,* Technical Paper 6, Trincomalee: Integrated Food Security Programme Trincomalee (IFSP).

Pretty, J., Irene Guijt, J. Thompson and Ian Scoones 1995. *A Trainer's Guide for Participatory Learning and Action*, London: International Institute for Environment and Development (IIED).

Schönhuth, Michael and Uwe Kievelitz 1993. *Participatory Learning Approaches. Rapid Rural Appraisal, Participatory Appraisal* (Schriftenreihe der GTZ 248) Eschborn:GTZ.

Schubert, Bernd et al. 1994. *Facilitating the Introduction of a Participatory and Integrated Development Approach (PIDA) in Kilifi District, Kenya. Vol. II: From Concept to Action: A Manual for Trainers and Users of PIDA,* Berlin: Seminar für Ländliche Entwicklung.

Various issues of the journal *PLA Notes* (earlier: RRA Notes), which publishes firsthand field experience with PLA. *PLA Notes* is edited by the International Institute for Environment and Development (IIED), London.